குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

லர் 22 ] சோபகிருது ஆண்டு ஐப்பசித்திங்கள் 10—11—63 [ இதழ்



தருமையாதினக் குருமுதல்வர்



ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

# ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

ஒருமையுடன் ஈசனருள்
ஓங்கிஎன்றுந் தூங்கல்
அருமை அருமை
அருமை—பெருமை இடும்(பு)
ஆங்காரங் கோபம்
அபிமானம் ஆசைவினை
நீங்காத போதுதா
னே. (11)

---

ஆசிரியர் :-

வித்துவான்,

சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள்

துணையாசிரியர் :-

வித்துவான்,

சோ. சிங்காரவேலன், M. A.

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

## தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 22 | 10—11—63 | இதழ் 12

## உட்பொருள்

எண் பக்கம்

1 பிள்ளைத்தமிழும் பெரும்பெயர்முருகனும் 629
2 வணக்கம் ... 636
3 ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை ... 637
4 சிவபோகசாரத் திருப்பதிகம் ... 645
5 அருள்வாக்கு - III ... 648
6 சித்தாந்த வினாவிடை ... 650
7 நினைப்பென்னும் நெடுங்கிணறு ... 655
8 சேக்கிழார் திருவாக்கில் - உலகெலாம் ... 662
9 ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களின் கேதாரநாதம் பதரிநாதத் தலயாத்திரை ... 665
10 புத்தக விமர்சனம் ... 671
11 செய்திகள் ... 674
12 எதிர்காலம் ... 678

---

## அட்டைப்பட விளக்கம்

திருக்கேதார - பதரியாத்திரையில்: 8—10—63 அன்று பதரிநாதர் திருக்கோயில் திருமுன் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள்.

உ
குருபாதம்
# ஞானசம்பந்தம்
தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 22 ] சோபகிருது – ஐப்பசி–10—11—63 [ இதழ் 12

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

# பிள்ளைத்தமிழும் : : பெரும்பெயர் முருகனும்

என்றும் இளையானாய் - அழகியானாய் உள்ள பெரும் பெயர் முருகனை இளங்குழவியாகக் கண்டு, தாய்மை நிலையில் நின்று அருட்பெருங் கவிஞர்கள் பாடியருளிய பிள்ளைத்தமிழ் நூல்கள் தமிழில் பல உண்டு. இவை தமிழ்க்குப் பெருஞ் சிறப்புத் தருவனவாய் நின்று அருள் பெருக்குகின்றன. தாய் தன் ஆருயிர்க் குழவியைப் பார்க்குந் தோறும் தழுவி மகிழ்ந்து உரையாடுந் தோறும் 'தன்னிழப்பு நிலை' எய்துகின்றாள். தன் நலமோ, பிற எண்ணங்களோ தாய்மையில் தலைதூக்குவதில்லை. கண்களை விளக்காக்கிக் கைகளைத் தொட்டிலாக்கி ஆருயிர்க் குழவியை வளர்த்து அன்புமழை மொழிகின்றாள் தாய்; பால் நினைந்தூட்டிப் பரிவுடன் வளர்க்கின்றாள் தாய்; கருணை நிரம்பி வழிந்து கனிவுடன் பேணுகின்றாள் தாய்; தன்னை இழந்து இறைவனை வழிபட, வணங்கத் தாய்த் தன்மையையே அருட்புலவர்கள்

கொண்டனர். தன்முனைப்பு ஒடுங்கி, சீவபோதம் கெட்டு அருட்செம்மை அடையத் தக்ககருவியாகத் தாய்மையைமேற் கொண்டனர். அங்நிலையில் அவர்கள் இருந்துபாடிய அமுதப் பாடல்களையே பிள்ளைத்தமிழ் என்கின்றோம். குழவியைக் காக்கவேண்டும் என்று கடவுளரை வேண்டி, சப்பாணி, செங்கீரை, தால், முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர், அம்மானை, நீராடல், ஊசல் ஆகிய பல பருவநிலைகளில் தம் அன்பினை இனிமை ததும்ப எடுத் துக் கூறும் 'எழில் ஒழுகும் முறை'யை இப்பிள்ளைத் தமிழ் நெறியிற் காண்கின்றோம்.

கடவுளர்களையன்றி கடவுள்நெறி நின்ற சேக்கிழார் போன்ற மெய்யடியார்களையும் இங்நெறிநின்று ஏத்தினர். பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவபிரானை யொழித்து ஏனைய பெருங்கடவுளரையெல்லாம் இப்பிரபந்தத்தால் பரவி யுள்ளனர். இவருள் முருகனைப்பற்றி உருகி உரைக்கும் பிள்ளைத் தமிழ்ப் பேரருட் செய்திகளை, கந்தர்சஷ்டிப் பருவத்தில் சிந்தித்து இன்புற்று உய்தி பெறுவோமாக.

சிற்றில் இழைத்து விளையாடுகின்ற இளம்பெண்கள் அச்சிற்றிலை, அழித்து விளையாடும் முருகனை — சிறு குறும்புபுரியும் சேவற்கொடியோனைச் சினம்பொங்கப் பேசு கின்றார்கள். 'தெள்ளுபுனற் காவிரி நாடா! சிவபிரானுக்கும் உமையம்மைக்கும் செல்வமகன்; அருமைப்பிள்ளை நீ; உண்மைதான். எம்மிடம் வந்து சிறு சோறு கேட்டாயானால் சிறிது தருவோம். சிறு குறும்பு பல செய்தாயானால் பொறுக்க மாட்டோம் இனி. அப்படி எங்கட்கு ஏதும் விதி யில்லை' என்கின்றார்கள்.

* பிள்ளை மதிச்செஞ் சடைச்செருகும்
பெருமானார்க்கும் உலகேழும்
பெற்றதாய்க்கும் நீயருமைப்
பிள்ளையெனில் எம்பேராய
வெள்ளம் அமைத்த சிறுசோறு
வேண்டினிடுகேம் அலதெளியேம்
விளையாடிடத்துச் சிறுகுறும்பு
விளைத்தாற் பொறுக்க விதியுண்டோ'

---

* முத்துக்குமாரசுவாமிப் பிள்ளைத்தமிழ் — சிற்றில்

இப்படிக் குமரகுருபரர் இனிக்கப் பாடும் பகுதி இனிய விருந்தாகும். ‘ அம்புலியே ! நீ புறவிருள் போக்குவை; முருகனே அகவிருள் போக்குவான். நீ விசும்பில் தவழ்வை ; அவன் புவனமெல்லாம் பொலிவான் நீ குமுத இதழ் திறப்பாய் ; அவன் அடியவர் உளத்தாமரை மலர்விப்பான். நீ இவ்வாறு வேறுபட்டிருப்பினும் அவன் அழைக்கின்றான் ; அவனுடன் ஆடவா ’ என்கின்றார் அடிகள்.

முருகன் எழுந்தருளிச் செய்யும் இளமை விளையாட்டுக்களை மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களும் விளக்குவர்: சிவபிரான் முருகனை ஆராத காதலோடு அணைத்துக்கொள்கின்றார். அவர் கையில் தீ எரிகின்றது. முடியில் வளைந்தபிறை இருக்கின்றது. பிறையின் கோணலை நிமிர்க்க நினைக்கின்ற முருகன், அதைத் தீயில் எடுத்து வாட்டத் தொடங்குகின்றானும். அமுதகலை சோரிந்து சந்திரன் வாடுகின்றானும். அந்த அமுதம் சிவபிரான் புலித்தோலாடை மீது வீழ, புலி உயிர்பெற்று விடுகிறதாம். அது சிவபிரான் கரத்துமானை உண்ண எழுகின்றது ; மான் கரத்தைவிட்டுத்துள்ளி விழுந்துஓடத் தொடங்கச் சிவபிரான் அதைப் பிடிக்க, முருகன் ‘ என்னால் விளைந்ததே இத்துணையும் ’ என்று கூறித் தந்தையார் மனத்தில் உவகை பெருக்குகின்றானும்.[1]

சிவபிரான் தமருகம் ஏந்தியுள்ளார். அதனை அடிக்கக் குறுந்தடி தேடிய முருகன் பிறையை எடுத்து மோதி அதிர்க்கின்றான். மகிழ்வு ஏற்படவில்லை. அருகில் உள்ள ஒற்றைக் கோம்பனாகிய விநாயகன் தந்தமே குறுந்தடியாகத் தக்கது என்று எண்ணி அதைப்பற்றி இழுக்க, தமையன்விட மறுக்க, இப்படி ஒரு சிறுபூசல். அன்னை தலையிட்டுச் சமாதானம் செய்து பிறையைக் கொடுத்து அமைதிப்படுத்துகிறாளாம். இப்படியெல்லாம். பிள்ளையவர்கள் பாடுகின்றார்கள்.[2]

---

[1] திருவிடைக்கழி முருகன் பிள்ளைத்தமிழ் - வாரானை — 3

[2] திருவிடைக்கழி முருகன் பிள்ளைத்தமிழ் - சிறுதேர் — 4.

திருமலைக்குமரனைத் தீந்தமிழிற்பாடும் தெய்வப்பாவலர் தெய்வயானையோடு புணர்ந்து விளையாடும் ஓர் இளங்களிறுகு முருகனைத் தரிசனம் செய்கின்றார். 'தாராடு மைக் குழல் சரிந்தாட வல்லி இடை தள்ளாட நகையாடியே, தளிர் ஆடு கற்பகச் சோலையிற் பந்தாடும் தனியானை முலை யானைமேல் சீராடு மான்மதச் சேருடும் ஒரு களிறு நீ; செங்கீரை ஆடியருள்' என்று கனியக் கனியப் பாடு கின்றார்.[1]

உயிரைப் பிணிக்கும் கட்டுக்கள் மூன்று; அவற்றின் மீது கொண்ட கருணையால் தனு, கரண, புவன, போகங் களை வழங்கியோன் இறைவன். தன்புகழைக் கூறித் தொழும் உயிர்கட்கு முத்திகொடுக்கும் முதல்வன் அவன். 'பண்டைக் கொடிய தீவினையும், பழிக்கும் குலமும், நான் எனுமோர் பகையும் தீர்த்திட்டு இம்மையிலே பரிந்து மனது குழைந்துருகும் தொண்டைத் தொகையினுடன் கூடித் தொனிக்க இனிக்கும் திருப்புகழைச் சொல்லித் துதிக்க நல்லியலாம தொலையா வாழ்வு கொடுத்தருளும் தோன்றல்' எனக் கனிகின்றது கவிஞர் நெஞ்சம்.[2]

"தேவே வருக! திருவிரிஞ்சைச்
சேயே வருக! தெவிட்டாத
தேனே வருக! சுவையமுதத்
தெளிவே வருக! கதிகொடுக்கும்
காவே வருக! பெருங்கருணைக்
கடலே வருக! கலைபொழியும்
காரே வருக! மரகதத்தின்
கண்ணே வருக! விண்ணோர்கள்
கோவே வருக! பெரியகுணக்
குன்றே வருக! உபதேச
குருவே வருக! சிவஞானக்
கொழுந்தே வருக! ஒருகரத்தின்
மாவேல் எடுத்த பரப்பிரம
வடிவே வருக! அடியார்கள்
வாழ்வே வருக! தெய்வசிகா
மணியே! வருக! வருகவே!

[1] திருமலை முருகன் பிள்ளைத்தமிழ் - செங்கீரை — 12.

[2] திருமலை முருகன் பிள்ளைத்தமிழ் - 21.

என்று வருகைப் பருவத்தில் தம் அன்பையெல்லாம் குழைத்துத் திருவிரிஞ்சை முருகன் திருவடிகளிற் தமிழாக்குகின்றார் மார்க்கசகாயதேவர்.[1]

ஆதரித்தடிபணியும் மெய்யடியார்களுக்குப் பிறவித் துயரை யொழித்துப் பெருவாழ்வாகிய முத்திப்பேறு கொடுக்கும் பிள்ளைப்பெருமானை - திருச்சேந்தூர்த் தேவனை, வாவா என்றழைத்துப் பரிவுடன் கூப்பிட்டால் வாராதிருக்க வழக்கில்லை ஆதலின் நாளும் தியானித்து, வருக வருக என்று அழைப்பீர் அருள்பெறுவீர் என்று உலகுக்கு அறிவுறுப்பாராய்ப் பகழிக்கூத்தர் தரும் பாட்டமுதம் தியானத்திற் குரியதாகும்.

“ பேராதரிக்கும் அடியவர்தம்
பிறப்பை யொழித்துப் பெருவாழ்வும்
பேறும் கொடுக்கவரும் பிள்ளைப்
பெருமான் என்னும் பேராளா !
சேரா நிருதர் குலகலகா !
சேவற்கொடியாய் ! திருச்செந்தூர்த்
தேவா ! தேவர் சிறைமீட்ட
செல்வா என்றன் திருமுகத்தைப்
பாராமகிழ்ந்து முலைத் தாயர்
பரவிப் புகழ்ந்து விருப்புடனப்
பா,வா வா என்றுனைப் போற்றப்
பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்
வாராதிருக்க வழக் குண்டோ
வடிவேல் முருகா ! வருகவே !
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா ! வருகவே ”[2]

சேந்தமிழ் மணக்கும் திருச் சேந்தில் வேலனைச் சிறுதேர் உருட்டவைக்கும் இவ்வாசிரியர் இன்றமிழ்க் கவிகள்[3] முருகன் அருள்வளம் கொழிக்கும் முதன்மைஉடையவராய் ஒளிர்கின்றன.

முருகப்பிரான் திருக்கரங்களும், திருவடிகளும் காய்ப்பு அடைந்துள்ளனவாம்; திருவிடைக்கழிப் பெருமானைத் தீந்தமிழாற் போற்றும் பிள்ளையவர்கள் வாக்கு:

---

[1] திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ் - 56.

[2] திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்

[3] திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் - 96

பிரணவப் பொருள் தெரியாத பிரமனைக் குட்டியதனால் திருக்கரம் காய்ப்படைந்தாம்; உமாதேவியார் மடித்தலத்திற் கிடந்து முலைப்பால் உண்ணும்போது சிவபிரான் மார்பகத்தே உதைந்து கொண்டு குடித்தனராம்; அப்போது சிவபிரான் மார்பிற் கிடந்த தலைமாலை பட்டுத் திருவடிக் காய்ப் படைந்ததாம். இளங்குழந்தையாக இருக்கும்போதே, பிரமன்மேல் பிரணவந் தெரியாததால் விளைந்த அறக்கருணை விளைவாம் இது; 'தந்தைக்கு முன்னம் தனி ஞானவாள் ஒன்று சாதித்தருள் கந்தச்சுவாமி' என்னும் அலங்கார வாக்கு மெய்யல்லவா? பிள்ளையவர்களது இப் பிள்ளைத் தமிழ்ப்பாட்டு பின்வருவது:

" நாவடி மறைக்கு முதல் ஓதியதன் உட்பொருள்
 நயந்துணர் வுருத பிழையால்
நான்முகன் முடித்தலை நடுங்கப் புடைத்துக்கை
 நகுகாய்ப்படைந்த(து) அன்றிப்
பூவடி யருந்திவண்டு அடைகிடக்குங்குழல்
 பூரண உமாதேவியார்
பொலிதரு மடித்தலம் இருந்திளங் கொங்கையிற்
 பொங்குபாலுண்டிடும் போது
ஊவடி முனைச்சூல பாணியார் திருமார்பில்
 உற்றமுன் சொற்றபிரமன்
ஒண் தலைப் பெருமாலை சிக்குண்டு புரளா
 உருண்டிட உதைந்துதைந்து
சேவடியினும் காய்ப்புறக்கொண்ட திண்டிறற்
 செல்வப்பிரான் வருகவே
செந்தமிழ் மணந்தழை நடைக்கழி விடைக்கழித்
 தெய்வநாயகன் வருகவே "*

முருகன் குன்று தோறுடும் குமரன்; அவன் எழுந்தருளி அருள் வழங்கும் திருத்தலங்களில் ஆறு படைவீடுகள் சிறப்புடையவை; நக்கீர தேவநாயனாரால் திருமுருகாற்றுப் படையில் நவின்றேத்தப் பெற்றவை ஆறுபடைவீடுகள். அம்மரபினைப் பகழிக்கூத்தர் பின்பற்றிப்பரவி மகிழும் திருப் பாடல் சிந்தித்து ஓதுதற்குரிய செம்மை உடையதாகும்:

" அறந்தரு புரந்தரா தியருலகில ரமகளிர்
 ஆடுமணி யூசல் சிற்றில்
அம்மனை கழங்குபல செறியுந் தடஞ்சாரல்
 அருவிபாய் பரங்கிரியும் உட்
புறந்தரு புனிற்றுவெள் வளைகடற்றிரை தொறும்
 பொருத சீரலைவாயுமென்
போதுகமழ் திருவா வினன்குடியு மரியமறை
 புகலுமேரகமும் இனிமைக்

* திருவிடைக்கழி முருகன் பிள்ளைத்தமிழ் - வாரானை - 2

குறந்தரு கொடிச்சியர் பெருங்குரவை முறைகுலவு
குன்றுதோறுடலும் தண்
கொண்மூ முழங்குவது கண்டின மெனக்கரட
குஞ்சரம் பிளிறு மரவம்
சிறந்தபழ முதிர்சோலைமலையும் புரந்தநீ
சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குலகலகனே
சிறுபறை முழக்கியருளே"[1]

'கண்ணீர் பெருக உருகி உளம் கசிந்து வழிபடுகின்ற அடியவர்களுடைய மாயைகளையும் கன்மங்களையும், அவர்களுடைய பழைய வினைகளையும், அவர்களுடைய எண்ணற்ற பிறவிக் கணக்குகளை யெழுதிய ஏட்டையும், நீயே பரம்பொருள் என்றெண்ணாத இழிவுடையோர் எண்ணத்தையும் நீ சிதைப்பாயாக. இவற்றை விட்டு நல்லூழ் இல்லாத சிறியேமாகிய எம் சிற்றில்லங்களைச் சிதைத்தல் உனக்குப் புகழோ? அன்றிப் புண்ணியமோ?' என்று நயமுறப்பாடும் பிள்ளையவர்கள் திருப்பாடல் இனிமைஉடையதாகஇலங்குகின்றது. தன்னைவணங்குவோர்களுடைய தீவினைகளைத் துடைக்கும் விடைக்கழி முருகன் திருவடி மலர்களின் பெருமையை இத்திருப்பாடல் விளக்குகின்றது; சிந்திப்பவர் உள் ஊறும் அமுதத் தேளிவாக உள்ள திருமுருகனை, சஷ்டித் திருநாளில் இங்ஙனம் சிந்தித்து உளங்கோண்டு இருமைப்பயன்களும் எய்துவோமாக.

[2]"கண்ணீர்பெருக உருகியுளம்
கசிநின் னடியார் மலமாயா
கன்மம் முழுதும்சிதை! அவர்முற்
கடியவினையைச் சிதை! அவர்தம்
எண்ணீர் பிறவிக் கணக்கெழுதும்
ஏட்டைச்சிதை! நீயேபரம் என்று
எண்ணாது இழுதை யுறுமுனகர்
எண்ணம் சிதை! மற்றிவைதவிர்ந்து
புண்ணீர் கவரும் வடிவேற்கைப்
புலவா! புலவர் போரேறே!
பொறியிலேம் சிற்றிலம் சிதைத்தல்
புகழோ அலது புண்ணியமோ?
தெண்ணீர் வளங்கூர் விடைக்கழிவாழ்
செல்வா! சிற்றில் சிதையேலே
சிந்திப்பார் உள் ளூறமுதத்
தெளிவே! சிற்றில் சிதையேலே!"

---

[1] திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் - 80.

[2] திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்தமிழ் - சிற்றில் - 6.

# வணக்கம்

உலகம் வாழ்வதையே சான்றோர் கருதுவர்; பரந்த எண்ணம், பரந்த சொல், பரந்த வாழ்வுமுறை பற்றியனவே நம் தெய்வத்தமிழில் உள்ள தோத்திர சாத்திரப் பனுவல்கள். உலக வாழ்வுக்கென்றே தம் வாழ்வை நியமித்துக்கொண்ட அருட் சான்றோர்கள் அருளிய பன்னிரண்டு திருமுறைகளைப்பற்றிய அருள்விளக்கங்கள் - ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியவர்களது அருட் பேருரைகள் - இந்தவிதழில் நிறைவெய்துகின்றன. பன்னிரண்டாம் திருமுறையில் வரும் 'உலகெலாம்' என்ற முதற்றிருப் பாட்டை வைத்துக்கொண்டு அவர்கள் அருளியுள்ள அற்புதமான விளக்கம் இந்த இதழ்க்கு நறுமணம் கூட்டுகின்றது. 'மலர்சிலம்படி' க்குக் குருமணியவர்கள் வழங்கியுள்ள விளக்கம் அற்புதம்; பதினான்கு உலகங்கள் என்பதற்கேற்பச் சேக்கிழார் உலகெலாம் என்ற திருவருட்டொடரைப் பதினான்கிடங்களிற் பதித்துள்ளார் என உரைக்கும் ஒளிநெறியை இதனுள் காண்கின்றோம். பன்னிரு திருமுறை யருளுரைகளை "ஞானசம்பந்தத் திற்கென்றே" சிறப்புற வழங்கியருளிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கட்குச் சைவவுலகின் சார்பில் வணக்கம் புலப்படுத்தி அடுத்துப் பதினான்கு சாத்திரங்கள் குறித்தும் அருளுரைகள் வழங்கியருளி உலகை வாழ்விக்கவேண்டும் என்று திருவடிபணிந்து விண்ணப்பித்துக் கொள்கின்றோம்.

வழக்கம்போல் தொடர் அம்சங்களுடன், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களின் திருக்கேதாரம், பத்ரிநாத் யாத்திரைக் கட்டுரை, 'நினைப்பென்னும் நெடுங்கிணறு' என்ற திருமுறைச் சிந்தனைக் கட்டுரை, வானொலி அருள்வாக்குக் கட்டுரை முதலியவற்றையும் இவ்விதழிற் காணலாம்.

அடுத்த இதழ் ஞானசம்பந்தத்தின் இருபத்துமூன்றாவது ஆண்டு முதல் இதழாக, புதிய பிற தோத்திர சாத்திரக் கட்டுரைத் தொடர்களுடன், குருவருள் திருவருள் துணைவலியால் மலர இருப்பதையும் இப்போதே மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புதிய ஆண்டிற்கான கையொப்பத் தொகைகளை அன்பர்கள் தவறாமற் செலுத்திப் பிறர்க்கும் தூண்டுகோலாக அமைந்து ஞானசம்பந்தம் பெற்றுய்ய வேண்டுகின்றோம்.

வாழ்க உலகெலாம்!

உ

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

# அருளுரை

திருச்சிற்றம்பலம்

உலகே லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

திருச்சிற்றம்பலம்

—சேக்கிழார்

திருமுறைகள் பன்னிரண்டில் முடிவாய் உள்ளது, சேக்கிழார் அருளிச்செய்த திருத்தொண்டர் புராணம், சைவ சமயத்தின் இருவகைப் பெருநூல்களாகிய திருமுறை சாத்திரங்களில் சாத்திரங்கள், திருமுறைகளின் கருத்தைத் தெள்ளத் தெளிய எடுத்து விளக்குவன. அவற்றுள் சிவஞானபோதம் எல்லாச் சாத்திரங்களின் பொருளையும் தன்னுள் கொண்டு நிற்பது. பன்னிரண்டு சூத்திரங்களாலாகிய அந்நூல், முடிவாகப் பன்னிரண்டாம் சூத்திரத்தில் கூறும்,

"செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே"

என்பதற்கு இலக்கியமாகவே உள்ளது, பன்னிரண்டாந் திருமுறை. அடியவரது வேடத்தையும் ஆலயங்களையும் அரன் எனவே தொழுதவரது வரலாற்றையே இது விரித்துக் கூறுகின்றது.

இதனை, 'திருத்தொண்டர் புராணம்' என்று வழங்காது, 'பெரிய புராணம்' என்றே பெரும்பான்மையும் ஆன்றோர் வழங்கி வருதல் ஒன்றே, இதன் பெருமைக்குப் போதிய சான்றாகும்.

பிற நூல்கள் யாவும், மூலமலமாகிய ஆணவ மலம் காரண மாகத் தோன்றும் வினைவழியே நின்று. மாயையின் காரிய மாகிய உலகப் பொருள்களில் மயங்கி, அவற்றைப் புகழ்ந்து பாடும் பாடல்கள்; திருமுறைகள் அவ்வாறன்றி, இறைவன் திருவருளால் விளங்கப்பெற்ற சிவஞானத்தின்வழி நின்று, நின்மல சொரூபனாகிய இறைவனது திருவடி இன்பத்திலும், அதனை அடைந்தவரது பெருமையிலும் ஈடுபட்டு, அவனையும், அவன் அடியார்களையுமே போற்றிப் பாடிய பாடல்கள், அதனால், அவற்றின் பெருமை அளவிடுதற்கரியது.

இனி. திருமுறைகளுள் முன்னர் உள்ள பதினொன்றும், இறை இன்பத்தில் திளைத்து நின்று, அவ்வின்பத்தின் நிலைமையை எடுத்தோதியன; ஈற்றில் உள்ள ஒன்று (பெரியபுராணம்). அவ் இறை இன்பத்தினை அடைந்தாரது நிலையை விளக்குவது, இறைவனுக்கும், அவனது இன்பத்திற்கும் இடம், அவனை அடைந்த அனுபூதிமான்களது உள்ளமே யாதலின், அவ்வனு பூதிமான்களே, யாவரினும் பெரியோராகின்றனர். அதனால். அவரது நிலையை விளக்கும் புராணம், பெரியபுராணம் ஆகின்றது.

"காலையும் மாலையும் கைதொழு வார்மனம்
ஆலயம் ஆரூர் அரநெறி யார்க்கே" (திருமுறை 4-17-8)

எனவும்,

"நினைப்ப வர்மனம் கோயிலாக் கொண்டவன்"
(திருமுறை 5-2-1)

எனவும் போந்த அப்பர் திருமொழிகளால், அடியவர் உள்ளமே இறைவனுக்கு இடம் என்பது பெறப்பட்டது. அதனால்,

"இறைவரோ தொண்டர்உள்ளத் தொடுக்கம்;
தொண்டர்தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே"

என்ற ஔவையார் வாக்குப்படி, அடியாரது பெருமை, ஒரு வகையில், ஆண்டவனது பெருமையிலும் சிறந்ததாகின்றது. ஆகவே, அப்பெருமையைக் கூறும் புராணம், பெரியபுராணம் ஆதற்குத் தடை என்னை!

அடியவரது பெருமை. ஆண்டவனது பெருமையிலும் சிறந்தது என்பதை, 'நீதி வெண்பா' என்ற நூல். ஓர் அழகான முறையில் விளக்குகின்றது.

'வெப்பமானதாகிய சூரியனது கிரணத்தில் நின்றாலும் நிற்கலாம்; அக்கிரணத்தைப்பெற்று நிற்கும் மணலில் நிற்றல் இயலாது; அதுபோல. இறைவனது அருளாற்றலின்முன்

நின்றுலும் நிற்கலாம்; அவ்வருளாற்றலைப்பெற்று நிற்கும் அடியவர்முன் நிற்றல் இயலாது' என்று விளக்குகின்றது அந்நூல்.

> "ஈசனெதிர் நின்றுலும் ஈசனருள் பெற்றுயர்ந்த
> நேசரெதிர் நிற்ப தரிதாமே - தேசுவளர்
> செங்கதிர்முன் நின்றுலும் செங்கதிரவன் கிரணம்
> தங்குமணல் நிற்பரிதே தான்"

என்பது அவ்வழகிய வெண்பா. இன்னும் அந்நூலில்,

> "முற்றும் இறைசெயலே முற்றிடினும் தன்னருளைப்
> பெற்றவர்தம் பாலே பெரிதாகும் - பற்றுமிகு
> தாபத் திடத்தே தழன்றிடினும் நற்சோதி
> தீபத் திடத்தே சிறப்பு"

என வரும் வெண்பாவினுல், இறைவன் திருவருள் பொதுவாக எங்கும் நிறைந்திருப்பினும், சிறப்பாக நன்கு விளங்குவது, அவன் அடியவரிடத்திலேதான் என்று அறிகின்ருேம். இக் கருத்தை, சிவஞானபோத வார்த்திகம் சிற்றுரை பேருரைகளில் 'இறைவன் குரு லிங்க சங்கமங்களில் தயிரின் நெய்போலப் பிரகாசமாயும், ஏனைய இடங்களில் அப்பிரகாசமாயும் நிற்பன்' எனக் கூறப்படுகின்றது. ஆகவே, இறைவனது அருட்சரித மாகிய பிற புராணங்களைப் பாடுதலைவிட, அடியார்களது அநுபவமாகிய சரிதத்தைப் பாடுதல் - அதிலும் தொகையாகவோ அல்லது வகையாகவோ இல்லாமல், விரியாகப் பாடுதல் அரிய தினும் அரிய செயலேயாம். அவ்வருஞ் செயலைச் சேக்கிழா ரன்றி யாரே செய்யவல்லவர்! இவ்வருமையை உணர்ந்த மாதவச் சிவஞான யோகிகள், தமது காஞ்சிப் புராணத்தில், சேக்கிழாரை,

> "தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
> வாக்கி னுற் சொல்ல வல்ல பிரான்"

என்று குறித்தருளினுர்.

இவ்வருமையைச் சேக்கிழாரும் உணராமல் இல்லை; உணர்ந்தே இதில் புகுவதற்கு அஞ்சினுர். ஆயினும், பல காரணங்களால் இதனை மேற்கொண்டார்.

அரசன் அநபாயச் சோழன், திருமுறை முதலிய சிவநெறி நூல்களில் ஈடுபட்டுத் திருவருளைப் பெற்று உய்தி பெறுமல், சீவக சிந்தாமணிபோன்ற காப்பியங்களிலே ஈடுபட்டு வாழ்நாள் போக்குவதைச் சேக்கிழார் மாற்ற முயன்ற நிலையில், திருத் தொண்டர்களது வரலாற்றை விரிவாகப் பாடித் தரும்படி அவரையே அவ்வரசன் வேண்டிக்கொண்டான். அவனது வேண்டுகோளை மறுக்க இயலாததோடு, அங்ஙனம் பாடித்தரின்'

அவனுக்கும், உலகிற்கும் பேருபகாரமாய் அமைவதையும் எண்ணினர். அன்றியும், திருத்தொண்டர்களது வரலாற்றை இனிதெடுத்து யாவர்க்கும் இயம்புவதில் தமக்கிருந்த ஒரு பேராவலும் ஒருவாறு முற்றுப் பெறுவது குறித்து மகிழ்வெய்தினர். ஆயினும், பெருமையால் தம்மை ஒப்பவராயும், ஒருமையால் உலகை வென்றவராயும் இருந்து அருமையாம் நிலையில் நின்ற அடியார்களது அரும்பெரு நிலைகளை எல்லாம் இனிது விளங்கப்பாடும் வன்மை தமக்கு உளதோ என அவர் நினைந்தார்.

> '' ஊனக்கண் பாசம் உணராப் பதியை
> ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி ''

எனச் சிவஞானபோதம் ஒன்பதாம் சூத்திரத்தில் அருளியபடி, இறைவனது அருட்டன்மை, பசுஞான பாச ஞானங்கட்கு எட்டாததுபோலவே, அடியார்களது பெருமையும் அவைகளுக்கு எட்டாதது என்பதை எண்ணினர். மேலும், '' உணர்த்த உணர்தலின் '' எனவும், '' அறிவிக்க அன்றி அறியா உளங்கள் '' எனவும், அந்நூலில் அருளியவாறு, ஆண்டவன் உணர்த்தவே நாம் உணரமுடியும் என்பதை நினைந்தார்.

தில்லையை நோக்கிச் சென்றார் ; அதன் எல்லையிலே வீழ்ந்து வணங்கினர். பின்பு உள்ளே சென்று சிவகங்கையில் மூழ்கி நியமங்களை முடித்துத் திருக்கோயிலினுள் புகுந்து வலம் வந்து கனக சபையிலே கூத்தப்பெருமானைக் கண்டு வணங்கி, ஆனந்த நடனத்தின் இன்ப வெள்ளத்திலே மூழ்கி, இருகைகளையும் சிரமேற் குவித்து நின்று, ' எம்பெருமானே, உன் அடியார்களது பெரும்புகழைப்பாட அடியேனுக்கு அடியெடுத்துக் கொடுத்தருளல் வேண்டும் ' என வேண்டி நின்று வணங்கினர்.

அப்பொழுது நிகழ்ந்தது யாது? அம்பலத்தாடுவாரது திருவருளினலே, '' உலகெலாம் '' என்ற ஒரு பேரொலி, அக்கனகசபையின்கண் அனைவரும் கேட்க அசரீரியாய் எழுந்தது. அதனைத் தில்லை மூவாயிரவரும், பல திருமடத்துத் தலைவர்களும், திருக்கோயிலில் தொண்டு செய்திருக்கும் அடியார்களும் கேட்டு, செம்பொன் அம்பலப்பெருமான் சேக்கிழாருக்குச் செய்த திருவருளின் திறத்தை நினைந்து, கைகளைச் சிரமேற் குவித்து மனம் உருகி, திருச்சிற்றம்பலப் பெருமானையும், சேக்கிழாரையும் போற்றினர்கள். பின்பு தில்லைவாழந்தணர்கள் சேக்கிழாரது திருவருட் பெருமையை வியந்து, கூத்தப்பெருமானது திருமாலையைத் திருநீறுடன் அளித்து, பரிவட்டம் கட்டி வாழ்த்துக் கூறினர்கள்.

அம்பலவாணரது அருட்பேறுகளாகிய அவையனைத்தையும் சேக்கிழார் வணங்கி ஏற்றுக்கொண்டு, பொன்னம்பலத்தினின்றும் போந்து சமய குரவர்கள் எழுந்தருளியிருக்கும்

இடத்தை யடைந்து, அளவற்ற அன்போடும் அவர்களை வணங்கி முறைப்படி திருநீறு முதலியன பெற்று அணிந்து, ஆயிரக்கால் மண்டபத்தை அடைந்து, விபூதி உருத்திராக்க தாரணங்களுடன் ஆசனத்தில் இருந்து திருவருளைத் தியானித்து, அம்பலவாணர் அடியெடுத்துக்கொடுத்ததாகிய, "உலகெலாம்" என்ற அச் சொல்லையே முதலாகக்கொண்டு புராணத்தைப் பாடத் தொடங்கினர். அம் முதல் திருப்பாட்டே இப்பொழுது நம் சிந்தனைக்கு முன்னிற்கின்றது.

சேக்கிழார் மேற்கொண்டது எத்துணைப் பெருஞ்செயல்! அடியார்களது பெருமை எத்துணைப் பெரியது! அதனைப்பாடி முற்றுவித்தற்குத் துணையாக இறைவன் அடி எடுத்துக் கொடுப்பது என்றால், அதற்குப் பெரிய ஒரு சொல்லைத்தானே முதலில் எடுத்துத்தருதல் வேண்டும்! அதனால், "உலகெலாம்" என்ற பெரிய சொல்லை ஆண்டவன் சேக்கிழாருக்கு முதலாக எடுத்துக் கொடுத்தான்.

உலகம் உய்யத்தோன்றிய நூல் பெரியபுராணம். அடியார்களது அருட்பெருமை மட்டும் அன்று; நாட்டின் நலன், மக்கள் வாழவேண்டிய நெறி, அரசியல்முறை முதலிய பலவற்றையும் தெளிவாகக் காட்டுவது அது.

> "எந்நிலையில் நின்றாலும் எக்கோலங் கொண்டாலும்
> மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள்"
>
> (சாக்கியநாயனர் புராணம் - 6.)

என்றபடி, 'எவ்வினத்தவராயினும், எந்நிலையினராயினும், அன்புசெய்தால் ஆண்டவனை அடையலாம்' என்பதைச் சிறப்பாக விளக்குவது தமிழ்நாட்டு மூவேந்தரும் தம் அரசாட்சியில்; சமயத்தையே முதன்மையாகக் காத்தனர் என்பதை வரலாற்று முறையில் தெரிவிப்பது; ஆகவே, உலகம் முழுதிற்கும் உரிய இந்நூலுக்கு முதலாக இறைவன், "உலகெலாம்" என்றதையே முதலாக எடுத்து வழங்கினன்.

> "பெரிது பெரிது புவனம் பெரிது"

என்று ஔவையார் கூறியபடி, உலகம் மிகப்பெரிது அன்றோ! அதிலும், 'உலகு எல்லாம்' என்று குறிப்பிடும் பொழுது எவ்வளவு பெரிய கருத்துத் தோன்றுகின்றது. இத்துணைப் பெரிய சொல்லை எடுத்துக் கொடுத்தபொழுது சேக்கிழார் அச் சொல்லை அப்பேரருளாளனுக்கே உரியதாக ஆக்கினர்.

"உலகெலாம்" என்ற தொடரை முதலாகக்கொண்ட சேக்கிழார், அதனைத் தொடர்ந்து, பல சொற்களைச் சேர்த்துப் பாடலாக்குதல் வேண்டும். அப்பாடலுக்கு உரிய பொருளாக எதனைக்கொண்டார்? அம்பலத்தாடுவானது அடியையே பொருளாகக் கொண்டார். அடியெடுத்துக் கொடுத்தவனது அடியைத் தவிர அவருக்கு அடிநிலைவேறுயாதுஉளது? அதனால், அதுவே பொருளாக அத்திருப்பாடலை அமைத்தருளினர்.

'உலகு' என்பது உயிர்களேயும் குறிக்கும். சாத்திரத்தில், 'சேதனப் பிரபஞ்சம், அசேதனப் பிரபஞ்சம்' என உலகம் இருவகைப்படும் எனக் கூறப்படுகின்றது. அவை முறையே அறிவுடைய உலகமும், அறிவில்லாத உலகமும் ஆகும். அவற்றுள் அறிவுடை உலகமாகிய சேதனப் பிரபஞ்சமே சிறப்புடையது. அஃது உயிர்களின் தொகுதியேயாகும். "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி-பகவன் முதற்றே உலகு" என்ற திருக்குறளிலும், 'உலகெலாமாகி வேருய் உடனுமாய்" என்னும் சிவஞானசித்திச் செய்யுளிலும், 'உலகு' என்பது, சேதனப் பிரபஞ்சமாகிய உயிர்த் தொகுதியையே சிறப்பாகக்குறிக்கின்றது. அங்ஙனமே இத்திருத்தொண்டர் புராணத்தின் முதல் திருப் பாடலிலும் இறைவன் எடுத்துக்கொடுத்த, "உலகெலாம்" என்பதைச் சேக்கிழார் சிறப்பாக உயிர்களேக் குறிக்கும் நிலேயில் வைத்து, இறைவன், உயிர்களால் உணர்தற்கும் ஓதற்கும் அரியவன் என, அவனது பெருநிலேயை விளக்கியருளினுர்.

இறைவன் வாக்கு மனுதீதன்; அஃதாவது, உயிர்களின் சொல்லேயும் நினேவையும் கடந்தவன். அதனுல். 'கடவுள்' எனப்படுகின்றுன். நாதமுடிவானவெலாம் பாச ஞானம் ஆகையால். 'வாக்கு' என்பதற்கு. 'பாசஞானம்' என்றும், உயிர்கள் 'உளம்'எனப்படுதலால், 'மனம்' என்பதற்கு. 'பசு ஞானம்' என்றும் சிவஞானபோதத்தில் சிறப்புப்பொருள் கொள்ளப்படுகின்றன. எனவே, 'உணர்தற்கு அரியவன்' என்றது, 'பசு ஞானத்திற்கு எட்டாதவன்' எனவும், 'ஓதற்கு அரியவன்' என்றது, 'பாசஞானத்திற்கு அப்பாற்பட்டவன்' எனவும் கூறியதாம்.

'விஞ்ஞானகலர். பிரளயாகலர், சகலர்' என உயிர்கள் மூவகைப்பட்டு, ஒவ்வொருவகையிலும் எண்ணற்றனவாய் இருத்தலும், அம் முத்திறத்து உயிர்கள் வாழும் உலகங்களும் அங்ஙனம் முறையே சுத்தமாயாபுவனம், அசுத்தமாயாபுவனம். பிரகிருதி மாயாபுவனம் என மூவகைப்பட்டுக் கோடானுகோடி அண்டங்களுடன் விளங்குதலும் தோன்ற, 'உலகம்' என்னுது, "உலகெலாம்" என்று அடிஎடுத்துக் கொடுக்கப்பட்டமையால், அத்துணே உயிர்வகையினருள் ஒருவராலும் இறைவன் உணர்வதற்கும், சொல்வதற்கும் அரியவன் என்பதை விளக்கினுர்.

உயிர்களால் உணர்தற்கு அரியநிலே இறைவனது சொருப நிலே ஆகையால், 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்' என்றது, இறைவனது சொருப நிலேயை விளக்கியதாயிற்று.

இறைவன், உணர்தற்கு அரியவனுயினும், உயிர்களின் பொருட்டு அவைகளின் மனேவாக்குக்களுக்கு அகப்படும் வகையில் அருள் உருவங்கள் பலவற்றைத் தாங்கி நிற்றலால், "நிலவு உலாவிய நீர்மலி வேணியன்" என்ருர். எனவே, இது இறைவனது தடத்த நிலேயைக் கூறியதாயிற்று.

இனி 'அத் தடத்த நிலேயில் அனந்த சத்தி எனப்படும் அளவில்லாத ஆற்றல்களேயுடையவனுய், உயிர்களே ஐந்தொழிற்

படுத்தி உய்விக்கின்ருன்' என்பதை விளக்குதற்கு, 'அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்' என்று அருளிச்செய்தார்.

'மலர்ச் சிலம்படி' என்னது 'மலர் சிலம்படி' என்று அருளியது, எல்லாப் பொருள்களும் அவனது திருவடியினின்றே தோன்றுதலே உணர்த்துதற்காம். எனவே, 'உலகெலாம்' என்பது, "உணர்ந்து" என்றதனேடு மாத்திரம் அன்றி, 'மலர்' என்றதனேடும் வந்து பொருந்துவதாகின்றது. இதனை, மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களும் தமது சேக்கிழார் பிள்ளைத் தமிழில் குறித்துள்ளார்.

திருவடியில் சிலம்பைக் கூறியது, நாதத்தைக் குறித்தற்கு. வாழ்த்தலும், வணங்கலும் கூறியதனுல், நினைத்தல் அவற்றிற்கு முன்பே அமைந்ததாகும். எனவே, 'மனம் மொழி மெய்' என்னும் முக்கரணங்களாலும், அம்பலத்தாடுவனது மலர் சிலம்படிக்கு வழிபாடு கூறியதாயிற்று, ஒருவாறு சுருங்க நோக்கும் பொழுதே இம் முதல் திருப்பாடல் எத்துணையோ அரிய பொருள்களை நமக்கு வழங்குகின்றது. இன்னும் ஆழ்ந்து நோக்கி விரித்துரைக்கப் புகின் அதன் பொருள் எல்லையற்றுச் செல்வதாகும். இத்துணைப் பெரும்பொருள்கட்கும், திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணத்திற்கும் முதல், இறைவன் அருளிய "உலகெலாம்" என்னும் அரிய பெரிய தொடரேயாகும்.

கூத்தப் பெருமான் எடுத்துக் கொடுத்த, "உலகெலாம்" என்பதை, முதலாகக் கொண்டு தமது வியாபாரத்தைப் பெரிய அளவில் நன்கு செய்தார் என்பர், மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்.

"உலகெலாம்" என்ற இறைவன் வாக்கினைச் சேக்கிழார் தமது புராணத்தின் முதல், நடு, முடிவு என்னும் மூன்றிடத்திலும் வைத்து முடித்திருத்தலை அனைவரும் அறிவர். அவற்றுள், முதலில் உள்ளதே மேற்காட்டப்பட்டது. இறுதியில் உள்ளதை முடிவில் காணலாம். இடையில் உள்ளது. திருஞானசம்பந்தர் இறைவன் அளித்த முத்துச்சிவிகையை ஏற்று அதனை வலம் வந்து வணங்கி அஞ்செழுத்து ஓதி அதன் மீது அமர்ந்தார் என்னுமிடத்தில் வருவது :

"சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்துவெண் ணீற்றெளி போற்றிநின்று
ஆதி யார் அருள் ஆதலின் அஞ்செழுத்து
ஓதி ஏறினர் உய்ய உலகெலாம்"

என்பது அவ்வரிய திருப்பாட்டு. பெரிய புராணப்பாடல்களின் தொகை 4286 அவைகளில் இப்பாட்டு, பெரியபுராணப் பாடல் ஏறத்தாழப் பாதியில் நிற்றல் காணலாம். இன்னும் 'உலகங்கள் பதினன்கு' என்பதற்கு ஏற்ப. "உலகெலாம்" என்பதைச்

சேக்கிழார் பெரியபுராணத்தில் *பதினான்கு இடங்களில் வைத்திருத்தல் அறிந்து மகிழத்தக்கது.

திருத்தொண்டரது வரலாற்றைத் தொகையாக அருளிய சுந்தரமூர்த்தி நாயனாரும் இறைவன் அடியெடுத்துக்கொடுக்கவே பாடியருளினார். வகைபாடிய நம்பியாண்டார் நம்பிகளும், திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார் சொல்லியபடியே கேட்டுப் பாடினார். விரிபாடிய சேக்கிழாரும் அம்பலவாணர் அடியெடுத்துக் கொடுக்கவே பாடினார். அங்ஙனம் பாடும்பொழுதும் வரலாற்று நூலாகப் பாடாது வணக்கநூலாகவே மூவரும் பாடியருளினார்கள். அதனால் நாயன்மார்களது பெருமை எத்தகையது என்பது விளங்கும்.

"தோடுடைய செவியன்" என ஓங்காரத்தில் தொடங்கிய திருமுறை, "உலகெலாம்" என மகர ஒற்றில் முடிகின்றது. அதனால் திருமுறைகள் அனைத்தும் ஓங்காரத்தின் விரிவாதல் விளங்கும். இங்ஙனம் ஆண்டவன் பெருமையில் தொடங்கி, அடியார்களது பெருமையில் முடிகின்ற திருமுறைகள் பன்னிரண்டையும் அனைவரும் உள்ளன்போடு ஓதுதல் வேண்டும். இதனை எங்கள் ஆதிபரமாசாரியர் ஸ்ரீ குருஞானசம்பந்தர்,

"ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்
நேசமுடன் அஞ்செழுத்தை நீநினையாய் - சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்"

என்று, தமது சிவபோகசாரத்தில் அருளியுள்ளார்கள். ஆதலின், பன்னிரு திருமுறைகளையும், உலகம் பாங்குடன் ஓதி, எல்லா இன்பங்களையும் இனிது எய்துவதாக.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்றதெங்கும் நிலவி யுலகெலாம்.

திருச்சிற்றம்பலம்.

---

* 'உலகெலாம்' எனமொழிந்த பதினான்கு இடங்கள் உள்ள பாடல் எண்கள்: 1, 356, 454, 906, 1130, 1772, 2119, 2546, 2762, 3247, 4012, 4226, 4273, 4286. பாடல்கள் தனியே 662-ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன.



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள்
ஸ்ரீ கேதாரநாத் தரிசனஞ் செய்தருளல்.

ஸ்ரீ காசி விசுவேசர் ஆலயம்:



அர்த்தஜாமபூஜை தரிசனம்

# சிவபோகசாரத் திருப்பதிகம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியவர்கள் விஜயதசமியன்று (27—10—63) திருவாய்மலர்ந்தருளியது.

## "செவ்வேள்"

கோயில் என்றாலே தில்லையைக் குறிக்கும். ஏத்தருந்தலம் எழிற்புலியூரே என்பது மெய்ம்மொழி. தில்லை சைவத்தின் உயிர்த்தலமாக விளங்குவது; ஆகாசத் தலமாகப் பஞ்சபூதத் தலங்களுள் அருளுடன் திகழ்வது. ஆனந்தமா நடராசப்பிரான் ஆடும் இன்பக்கூத்து நிகழும் திருத்தலம். 'அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்' என்பர் அப்பரடிகள். 'கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின்மேலாம் சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல்' என்றும், 'அலகில் சோதியன் அம்பலத்தாடுவான் மலர் சிலம்படி' என்றும் போற்றுவர் சேக்கிழார் அடிகள் இத்தகு கோயிலைத் திருஞான சம்பந்தர் சென்று கண்டருளும் திறமும், அங்குப் பாடியருளிய திருப்பதிகம் சிவபோகசாரமாகத் திகழும் மாண்பும் சேக்கிழார் அடிகளார் பெரியபுராணத்திற் சிறப்பித்துப் பேசப்பெற்றுள்ளன.

திருஞானசம்பந்தர் தில்லைக்கு எழுந்தருளும் செய்தி கேட்டு அடியவர்கள் பெருமகிழ்வுற்றனர். தில்லைவாழந்தணரும் பிறரும் அலங்காரம் செய்து நீளும் அன்புடன் வரவேற்றனர். 'வேத நாதமும் மங்கல முழக்கமும் விசும்பிடை நிறைந்தோங்கச் சீத வாச நீர் நிறைகுடம் தீபங்கள் திசையெலாம் நிறைந்தார' எதிர்கொண்டு வரவேற்றனர். தென்றிசைவாயில் எல்லைகடந்த திருஞானசம்பந்தர் திருவீதியைத் தொழுதார்; திருத்தொண்டிலே ஒன்றுபட்டுக் கலந்த அன்பர்களுடைய சிந்தைபோல விளங்கும் அத் திருவீதியினைத் தொழுது எழுநிலைக் கோபுரத்தை

வழிபட்டு உட்சென்றார்; திருமாளிகைப் பத்தியை வலம் வந்தார்; பேரம்பலத்தை முதற்கண் வணங்கித் திருவணுக்கன் திருவாயிலை அடைந்தார்; ஆர்வம் பொங்கக் கைகளைத் தலைமேற் குவித்துக் கண்களிப்ப உருகும் அன்புடன் புகுந்தார். மெய்ஞ்ஞானமாகிய அம்பலத்தையும், உண்ணிறைந்தெழும் ஞானத்து எழும் ஆனந்தக் கூத்தையும் கண்டு கும்பிட்டுக் களித்தார். உணர்வினுள்ளே நேர்பெற வரும் சிவபோகத்தை உருவின்கண் புலப்படுகின்ற ஐம்பொறிகளாற் றுய்க்கும் அளவிலும் எளிதாக அருளினீர் இறைவா என்று போற்றி இன்னிசை பாடினார்; ஆனந்தக் கூத்தாடினார்; விழிமாரி பொழிந்தனர்.

ஊழி முதல்வர்க்கு உரிமைத் தொழில்பூண்ட சிறப்புடைய திருத்தொண்டர்களாகிய தில்லைவாழந்தணரை முன்வைத்துச் சிறப்பித்துக் "கற்றாங் கெரியோம்பி" எனத் தொடங்கும் திருப் பதிகத்தைப் பாடியருளினார்; இதனைச் சேக்கிழாரடிகள் பின்வரும் செஞ்சொற் கவிகளால் உணர்த்துவர்:

"உணர்வின் நேர்பெற வருஞ்சிவ போகத்தை
ஒழிவின்றி உருவின்கண்
அணையும் ஐம்பொறி யளவினும் எளிவர
அருளினை யெனப் போற்றி
இணையில் வண்பெருங் கருணையே யேத்திமுன்
எடுத்தசொற் பதிகத்தின்
புணரும் இன்னிசை பாடினர் ஆடினர்
பொழிந்தனர் விழிமாரி" (161)

"ஊழி முதல்வர்க் குரிமைத் தொழிற்சிறப்பால்
வாழிதிருத் தில்லைவா ழந்தணரை முன்வைத்தே
ஏழிசையுமோங்க வெடுத்தா ரெமையாளுங்
காழியர்தங்காவலனார் கற்றாங் கெரியோம்பி" (162)

இவ்விடத்துத் 'தாவில் சராசரங்களெல்லாம் சிவம் பெருக்கும் 'திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருவுள்ளத்தில் பெருகித் தழைந்த சிவபோகத்தின் பிழிவே - சிவபோகசாரமே அத் திருப்பதிகமாக வெளிப்பட்டதென்று சேக்கிழாரடிகள் கூறும் இனிமை இனிதுணர்தற்குரியதாகும். அச்சிவபோகம்,

"உணர்வின் நேர்பெற வரும் சிவபோகம்". என அடை யடுத்து அருளப்பெற்ற ஆழம் ஆழ்ந்தின்புறத் தக்கதாகும் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமும் பவமதனை

அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானமும், உவமையிலாக் கலைஞானமும், உணர்வரிய மெய்ஞ்ஞானமும், ஆகிய அனைத்தும் உள்ளத்தே தேக்கிய உரவோர் ஆதலின் அவ்வருளாளருடைய உணர்வில் சிவபோகம் நேர்பெற வரும் சிறப்பித்தாயிற்று. அத்திருப்பதிகம் சிவபோகசாரமாகவே விளங்குகின்றமை கற்றூர் அறிந்த கவினுடையதாகும்; அப்பதிகத்தின் திருக்கடைக் காப்பு அருளிச்செய்தவாற்றைச் சேக்கிழார் பின்வருமாறு அருளுவர்;

" பண்ணார் பதிகத் திருக் கடைக்காப்புப்பரவி
உண்ணூகும் என்பும் உயிரும் கரைந்துருக்கும்
விண்ணாயகன் கூத்து வெட்டவெளியே திளைத்துக்
கண்ணாரமுதுண்டார் காலம்பெற அமுதார் " (163)

உடலும் உயிரும் கரைந்துருகும் வண்ணம் அப்பன் ஆடும் ஆனந்தத் தனிக்கூத்தைக் கண்ணார உண்டார் என்று முடிக்கின்றார்.

முற்று வெண்திங்கள் முதல்வன் பாதமே பற்றுகக் கொண்டவரைப் பாவங்கள் பற்று; பிறப்பில்லாப் பெருமானாகிய பிஞ்ஞகனை மறப்பிலாதவர் மையல் தீர்வார்; சிற்றம்பலம் மேய இறைவன் கழலேத்தும் இன்பமே இன்பம்; சிற்றம்பலம் மேய செல்வன் கழலேத்தும் செல்வமே செல்வம்; சிற்றம்பலத்தே ஆடும் பெருமான் கழலையன்றி வேறொன்றை உள்ளம் பேணாது; சிற்றம்பலந்தன்னைத் தலையால் வணங்குவோரே தலையாயவர் ஆவர்; சிற்றம்பலம் மேய நீரார் சடையானை நித்தலும் ஏத்துவார் தீராநோயெல்லாம் வாளா மாயும்; சிற்றம்பலம் மேய நட்டப்பெருமானை நாளும் தொழுவோம்; - ஞாலத்துயர் காழி ஞானசம்பந்தர் சீலத்தார் கொள்கைச் சிற்றம்பலம் மேய சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலைக் கருத்துக்கள் இவை.

இத்தமிழ்மாலையை - உணர்வின் நேர்பெறவரும் 'சிவபோகச் செய்யுள் மாலை'யைக் கோலத்தால் பாடவல்லார் நல்லார் என்பது கவுணியக் கொழுந்தாம் காழியர் காவலர் கருத்துரை.

இத்திருப்பதிகம் தில்லைவாழந்தணர் சிறப்புரைக்கும் சிவ போக சாரமாகத் திகழ்கின்றது.

உ ி

# அருள்வாக்கு - III

திரு. அ. ச. ஞானசம்பந்தம் எம். ஏ.,

மக்களில் எத்தனையோ வகையுண்டு. எவ்விதமான கொள்கையும் இல்லாமல் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்ற கருத்தில், வெந்ததைத் தின்று காலம் வந்தபொழுது உயிரை விடுகின்றவர்கள் ஒரு சிலர். இதன் எதிராக வாழ்க்கையில் எல்லாவற்றிலுமே வெறுப்புக்கொண்டு, எப்பொழுதும், எதன் மேலும் வெறுப்பு உடையவராய் முணுமுணுக்கின்ற இயல்புடையவர் ஒரு சிலர். இவ்விரண்டு கூட்டத்தார்களுக்கும் எதிராக மூன்ருவது ஒரு வகைக்கூட்டம் உண்டு. இவர்கள் ஆழ்ந்து அமைதியுடன் வாழ்பவர்கள். இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா என்ற முறையில் எவ்விதமான படாடோபமும் இல்லாமல் வாழ்பவர்கள். ஆனல், இத்தகையவர்கள் ஏதாவது ஒரு முடிவு எடுத்துக்கொண்டார்களேயானல் அவர்களை அந்த முடிவில் இருந்து மாற்றுதல் இயலாதகாரியம். நம்மில் சிலரைப் போன்று இவர்கள் திடீர் என்ற ஒரு முடிவுக்கு வந்து, தேவை ஏற்படும்பொழுது திடீர் என்று அந்த முடிவைக் காற்றில் பறக்க விடுவதுமில்லை. அதன் மறுதலையாக, இவர்கள் நன்கு ஆராய்ந்து அதன் பின்னரே முடிவு எடுப்பார்கள். அவ்வாறு முடிவு எடுத்த பிறகு தாம் எடுத்த முடிவு காரணமாகத் துயரம் ஏற்படுவதாயினும், தம் உயிரே போவதாயினும் தம் முடிவை இவர்கள் மாற்றிக்கொள்பவர் அல்லர்.

திருவள்ளுவர் கூறிய 'எண்ணித் துணிக்கருமம் துணிந்த பின், எண்ணுவம் என்பது இழுக்கு'' என்ற குறளுக்கு இலக்கியமாக வாழ்கின்ற இவர்கள் மானிட வர்க்கத்தில் மிக உயர்ந்த இடத்தில் இருப்பவர்கள். ஏயர்கோன்கலிக்காம நாயனர் என்பவர், சுந்தரமூர்த்திசுவாமிகளிடம் பகையைப் பாராட்டினர். அவருடைய பகையைப்போக்க ஆண்டவன் அவருக்கு ஒரு வயிற்று வலியைத் தந்தான். எந்த மருந்திலுைம் நோயைப் போக்க முடியாமல் அவர் இடர்ப்பட்டிருக்கும்பொழுது, இரவில் அவருடைய கனவில் வந்து சுந்தரமூர்த்தி சுவாமிகள் வந்தால் தான் அவருடைய வயிற்றுவலியைப் போக்க முடியும் என்று இறைவனே கூறினன். ஆனல், துணிந்தபிறகு திரும்பிப்போவது இல்லை என்ற முடிவையுடைய ஏயர்கோன் கலிக்காம நாயனர், முழுமுதற் பொருளான ஆண்டவனைக்கூட, தம் கொள்கையின்

எதிரே எறிந்து விடுகிறார். "ஆண்டவனே; பரம்பரை, பரம்பரையாக நீயே என்னுடைய தலைவன் என்றும், உனக்கு அடிமை செய்வதே எங்களுக்குப் பெரும் பாக்கியம் என்றும், எம் முன்னோர்களும் நானும் வாழ்ந்து வருகிறோம். அப்படி இருக்க நீரே வலியச் சென்று ஆட்கொள்ளப்பெற்ற இந்த சுந்தரமூர்த்தி வந்து என் வலியைத் தீர்ப்பதைக் காட்டிலும், "இவ்வலி தீராமலேயே நான் உயிரைவிட்டால் கூடத் தவறு இல்லை" என்று கூறிவிடுகிறார். இறுதியில் சுந்தரமூர்த்திகள் தம்மைப் பார்க்க வருகிறார் என்பதை அறிந்த ஏயர்கோன் கலிக்காம நாயனார், அவர் முகத்தில் விழிப்பதைக் காட்டிலும், உயிரை விடுவதே சாலச் சிறந்தது என்ற கருத்தில் கத்தியால் தம் வயிற்றைக் கிழித்துக்கொண்டு, உயிரையே விட்டுவிடுகின்றார்.

இப்பெரியவர்களுடைய நெஞ்சு உரம் இருந்தவாறு என்னே; ஆண்டவன் வந்து கூறினாலும் அக்கூற்றுத் தம்முடைய கொள்கைக்கு எதிராக இருக்குமானால் அந்த ஆண்டவனையும் எட்டி நில் என்று சொல்கின்ற அளவுக்கு இரும்பு நெஞ்சம் படைத்தவர்களாக இருக்கின்றார்கள். தாம் அறிந்து தேர்ந்தெடுத்த கொள்கையின்மேல் உண்மையான நம்பிக்கை உடையவர்கள், அக்கொள்கைக்கு இடையூறு வருமானால், உயிரை விடுவதை அல்லாமல், கொள்கையை விடுபவர் அல்லர். தனிப்பட்ட மனிதர்களுடைய வாழ்க்கையிலும் சமுதாயத்தின் வாழ்க்கையிலும் ஏன், எந்த ஒரு நாட்டின் வாழ்க்கையிலேயும் கூட இக்கருத்து விரும்பி மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். கொண்ட கொள்கையினிடத்து உறுதிப்பாடு இல்லாத ஒரு மனிதன், வாழ்வதும் வீழ்வதும் ஒன்றுதான். எந்த ஒரு கொள்கையையும் மேற்கொள்ளுமுன்னர், நன்கு ஆராய்ந்து, சீர்தூக்கி அதன் பின்னரே மேற்கொள்ளவேண்டும். அவ்வாறு மேற்கொண்ட பின்னர், இடையில் அதனைக் காற்றில் பறக்கவிடுவதும், அல்லது அந்த நேரத்திற்கு ஓர் இலாபம் ஏற்படுகிறது என்பதற்காகக் கொள்கையைக் காற்றில் பறக்க விடுவதும், அறிவுடையார் செய்கின்ற செயல் அன்று. எந்த ஒரு கொள்கையும் அனைவராலும், ஒப்புக்கொள்ளப்பட வேண்டும் என்று கூறமுடியாது. ஒரு சிலர் அதனைப் போற்றிக்கூற முற்படுவார்களேயானால் அதனைத்தீயது என்று ஒருசிலர் தூற்ற நேரிடும் அன்றோ. எனவே, நலம் தீங்குகளை ஆராய்ந்து, தனி மனிதனோ ஒரு நாடோ ஏற்றுக்கொண்ட ஒரு கொள்கையை ஏதோ ஒரு காரணம் அல்லது அந்த நேரத்தில் ஒரு லாபம் வருகிறது என்று கருதி அல்லது ஆபத்து வருகிறது என்று கருதி, விட்டுவிட்டு, புதியதாக ஒரு கொள்கையை மேற்கொள்ளத் தொடங்கினால், அது அறிவுடைமையும் ஆகாது, சிறப்பும் ஆகாது.

# சித்தாந்த விஞவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,

வித்துவான். திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.

( மலர் 22, இதழ் 11, பக்கம் 605இன் தொடர்ச்சி )

## விரிப் பகுதி

மாணக்கன் : அடிகளீர், சித்தாந்தப் பொருள்களைத் தொகுத்து உணர்த்தினீர்கள்; அவைபற்றி எழும் ஐயந்திரிபுகள் அனைத்தும் அகலுமாறு, அவற்றை இனிது விளங்க விரித்து அருளிச்செய்தல் வேண்டும்.

ஆசிரியர் : நன்றே விஞவினை; சித்தாந்தப் பொருள்களை ஏனைய பூருவபக்கச் சமய நூல்களோடு ஒப்புநோக்கி உணர்தல் இன்றியமையாததே. அவ்வாறு உணரும்பொழுதுதான், சித்தாந்தத்தை மனம் சலியாது பற்றி நிற்கும்; அதனல்; அங்ஙனமே விளக்குவோம்.

## உலகம் உள்பொருளே எனல்

### சூனிய வாதம் பொருந்தாமை

மாணக்கன் : 'பதி' எனப்படும் இறைவன் ஒருவன் உண்டு என்பது. அருள்மொழிகள் பலவற்றிலும் இனிது பெறப்படுமாயினும், என்போன்ருர் அதனைக் கருதலளவையால் துணிதல், உலகத்திற்குத் தலைவன் ஒருவன் இருத்தல் இன்றியமையாதது என்பதுபற்றியேயாம். ஆயினும், பௌத்த மதத்தினர், 'உலகம்' என்ற ஒரு பொருளே இல்லை என்கின்றனர். அதனை அவர் பின்வருமாறு விளக்குவர்.

'எல்லாப் பொருளும், தோன்றிய மறு கணத்தில் (க்ஷணத்தில்) அழிந்துவிடும்; எந்தப் பொருளும் ஒரு கணத்திற்குமேல் இருப்பதில்லை; ஒருகணத்தில் தோன்றிய பொருள் மறு கணத்தில் அழியும்பொழுது, அந்தக் கணத்திலே மற்ரெரு பொருள் தோன்றும்; அந்தப் பொருள் அழியும் அடுத்த கணத்தில், மற்ரெரு பொருள் தோன்றும்; இவ்வாறே ஒன்றின் அழிவில்

மற்றொரு பொருள் தொடர்ச்சியாய் இடையறாது தோன்றி அழியும். இத் தோற்றங்கள் மிக விரைவாக நிகழ்தலால், அத் தொடர்ச்சி நமது உள்ளத்தில் மறையாது நிற்கும். அதனால், எல்லாப் பொருள்களும் என்றும் உள்ளன போலத் தோன்றுகின்றன; ஆயினும், உண்மையில் எந்தப் பொருளும் உள்ளன அல்ல;

பின்னர்த் தோன்றும் பொருளுக்கு முன்னர்த் தோன்றிய பொருளே சார்பாய் அமையும் ஆதலின், இவைகளைத் தோற்றுவித்தற்கு ஓர் இறைவன் தேவை இல்லை.'

இவ்வாறு கூறும் வாதத்தை அவர்கள் (பௌத்தர்கள்) 'சூனிய வாதம்' என்று சொல்லிச் சிறந்ததாகக் கொள்கின்றனர். உலகத்தின் தன்மை அவர்கள் சொல்லுகிறபடியேயிருக்குமாயின், இறைவன் வேண்டுவதில்லையன்றோ?

ஆசிரியர்: அறியாது வினவுகின்றாய்! பின்னர்த் தோன்றும் பொருளுக்கு, முன்னர்த் தோன்றிய பொருளே சார்பாக அமையுமாயின், முதலில் தோன்றிய பொருள் எந்தப் பொருளைச் சார்பாகக் கொண்டு தோன்றியது?

'முதலில் தோன்றிய பொருள்மட்டும் சார்பு ஒன்றும் இன்றியே தோன்றிற்று' எனின், ஏனைய பொருள்களும் ஏன் சார்பின்றித் தோன்றுதல் கூடாது?

மேலும், 'முதலில் தோன்றிய பொருள் சார்பின்றித் தோன்றியது; மற்றைய பொருள்கள் எல்லாம் சார்புபற்றித் தோன்றுவன' எனக் கூறினால், பொருள்கள் இருவேறு தன்மை உடையன என்று ஆகின்றது அன்றோ? அங்ஙனம் ஆயின், 'முதலில் சார்பு இன்றியே தோன்றியது' என்பது, நாம் சொல்லுகின்ற, தோற்றமும் முடிவும் இல்லாத இறையே' என்று கொண்டால் வரும் தவறு என்னை?

மாணுக்கன்: முதல் தோற்றத்தைப் பற்றிப் பௌத்தர்கள் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. அதனால், முதலில் தோன்றிய பொருள் சார்பின்றியே தோன்றியது என்றோ அல்லது சார்பு பற்றித் தோன்றியது என்றோ அவர்கள் வரையறுத்துச் சொல்லவில்லை. அதனால், 'முதல் தோற்றம் இன்ன தன்மைத்து என்று அறியக்கூடாததாகவே உள்ளது' என்பதும், 'இப்பொழுது கண்கூடாக நிகழக் காண்பது சார்புபற்றிய தோற்றமேயன்றிப் பிறிதில்லை' என்பதுமே அவர்கள் கருத்து எனத் தெரிகின்றது.

ஒன்றன் கேட்டில் மற்ருென்று தோன்றிக் கெடுதலே, அவர்கள், 'கணபங்க (க்ஷணபங்க) நியாயம்' என்றும், 'அதற்கு எடுத்துக்காட்டு (திருஷ்டாந்தம்), வித்தின் கேட்டில் முளை தோன்றுதல்' என்றும் கூறுவர். ஆகவே, முதல் தோற்றத்தைப் பற்றி வினவி அவர்களை மறுத்தல் இயலாதாகின்றது.

ஆசிரியர் : முதல் தோற்றம் பற்றி மாணுக்கர்க்கு எழும் ஐயத்தை அகற்றமாட்டாது, அதனைத் தாமும் ஐயுற்றே விடுவாராயின், அதுவே அவர்தம் கொள்கை பொருந்தாது என்பதனை நன்கு விளக்கும். அது நிற்க, அவர் கருத்து நீ கூறியவாருயின், இனி வேருெருவாற்ருல் வினவுவோம்.

யாதொரு பொருளும், ஒரு கணத்தில் தோன்றி, மறு கணத்தில் அழிவதாயின், தோன்றுதற்கு முன்னர் அதன் நிலை யாது? அஃதாவது, தோன்றும் கணத்திற்கு முற் கணத்தில் அஃது உளதாய் இருந்து, பிற் கணத்தில் தோன்றிற்ரு? அல்லது இல்லாதிருந்தே தோன்றிற்ரு?

மாணுக்கன் : 'தோன்றிற்று' என்னும் சொல்லிற்கே, 'அப்பொருள் முன்பு இல்லாதிருந்து பின்பு தோன்றிற்று' என்பதுதானே பொருள்? அதனுல், 'அது முன்பு எவ்வாறு இருந்தது?' என்னும் வினவிற்கே இடம் இல்லை. ஆயினும், அதனை வலியுறுத்திக் கொள்ளுதற்பொருட்டு அவ்வாறு, வினவின், 'அப் பொருள் முன்பு இல்லாதிருந்தே பின்பு தோன்றியதாகும்' என்பதே விடை.

ஆசிரியர் : இவ் விடையை அறிந்தே நாம் வினவினேம்; ஏனெனில், 'அங்ஙனம் கூறுதல் அறியாதார் கூற்றே' என்பதனை விளக்குதற் பொருட்டாம்.

மாணுக்கன் : அஃது, அறியாமையுடையார் கூற்ருதல் எவ்வாறு?

ஆசிரியர் : இல்லாத பொருள், முக்காலத்திலும் இல்லாததே; அவ்வாறே உள்ள பொருளும் முக்காலத்திலும் உள்ளதே, இங்ஙனம் அன்றி, ஒரு காலத்து உளதாய பொருள், மற்ருெரு காலத்தில் இலதாய் ஒழிவதும், ஒரு காலத்தில் இலதாய பொருள், பின்னெரு காலத்தில் உளதாவதும் இல்லை. 'இல்லது தோன்ருது; உள்ளது அழியாது' என்பது, சித்தாந்தத்தின் அடிநிலை உண்மைகளுள் ஒன்று.

இவ்வாறன்றி, 'முன்பு இல்லாத பொருள் பின்பு தோன்றும்' என்பது, அனுபவத்திற்கு மாருனதாகும்; எங்ஙனமெனின்,

இல்லாத பொருள் தோன்றுவதாயின், முயலின் தலையிலும் எப்போதாயினும் கொம்பு தோன்றுதல் வேண்டும்; அஃது எப்பொழுதும் தோன்றுவதே இல்லை. அங்ஙனம் தோன்றாமைக்குக் காரணம் யாது? முயலின் தலையில் கொம்பு இல்லாமையே. ஆகவே, இல்பொருளாகிய முயற்கொம்பு மூன்று காலத்திலும் இல்பொருளாகின்றதேயன்றி, உள்பொருளாகின்றதில்லை; அதனால், இல்லது என்றும் இல்லதேயாம். "இல்லதற்குத் தோற்றம் இன்மையின்" என்பது, மெய்கண்டார் அருளிச்செய்த ஓர் அருந்தொடர் (சிவஞானபோதம் சூ. 1. அதி. 2. வார்த்திகம்).

மாணாக்கன்: 'இல்லது தோன்றாது' என்பது உண்மையே; ஆயினும், 'உள்ளது தோன்ற வேண்டுவதில்லையன்றோ?' என்பது, பௌத்தர் நிகழ்த்தும் தடை. அஃதாவது, ஆவிற்கு (பசுவிற்கு)க் கொம்பு உண்டு என்பது அனுபவத்தாற் காணப்பட்டபின்பு அவ் ஆவிற்குக் கொம்பு தோன்ற வேண்டுவதில்லையன்றோ?' என்பது. அதனால், 'முன்பு இல்லாதது பின்பு தோன்றும்' என அவர்கள் பொதுவாகக் கூறினும், உண்மையில், 'பொருள்கள் யாவும் இல்லனவும் அல்ல; உள்ளனவும் அல்ல; இன்ன எனச் சொல்ல ஒண்ணாதனவேயாம்' என்பதே அவர்கள் கொள்கை. 'சூனியம்' என்பதற்கும் இதுவே பொருள் என அவர்கள் கூறுவார்கள். அஃதாவது, 'பொருள்கள் இல்லனவாயின் தோன்றமாட்டா; உள்ளனவாயின், தோன்ற வேண்டுவதில்லை. ஆகையால், எல்லாப் பொருள்களும், இரண்டு தன்மையும் இன்றிச் சொல்ல ஒண்ணாத தன்மையை உடையனவாம்' என்பர். அதனால், 'இல்லது தோன்றாது' என்பதேபற்றி அவர்களை மறுத்தல் இயலாதாகின்றது.

ஆசிரியர்: ஆம்! அவர்கள் கொள்கை அதுதான்; அஃது இன்னும் நகைப்பிற்கு இடமாம் என்பதை விளக்கவே, அதனையும் நீயே கூறும் முறையில் வினவினேம்.

மாணாக்கன்: அவர்களது நுண்ணிய முடிபு, நகைப்பிற்கு இடமாதல் எப்படி?

ஆசிரியர்: ஆம்! அஃது அறிவுடையார்க்குப் பெருநகை விளைப்பதேயாம்; எங்ஙனம் எனின், பொருள்களின் பிற தன்மைகளைப்பற்றி அவ்வாறு கூறினும் ஒருவாறு பொருந்தும்; அவற்றின் உண்மை, இன்மைகளை, அஃதாவது அவற்றின் இருப்பு, இல்லாமைகளைப் பற்றியே அவ்வாறு கூறுதல் சிறிதும் பொருந்தாது. ஏனெனின், உள்ளது எதுவோ அதுவே, 'பொருள்'

என்றும், இல்லாதது, 'பொருள் அன்று' எனவும் கூறப்படுமாகலின். உள்ளதை, 'உள்பொருள்' என்றல்போல, இல்லதை, 'இல் பொருள்' எனக் கூறுதல், இனிது விளங்குதற் பொருட்டு வழங்கும் பான்மை வழக்கன்றி, மெய்ம்மை வழக்கன்று. அதனால், 'இல் பொருள்' என்பதற்கும், 'பொருளன்று' என்பதே கருத்து. அது பற்றியே பொருள்களின் உண்மைத் தன்மையையே (இருப்பையே), 'பொருண்மை' என வழங்குவர். ஆசிரியர் எல்லாரும். ஆகவே, பொருண்மையை மறுத்து, 'அத்தன்மை இல்லாததே பொருள்' எனப் பொருளுக்கு வரையறை கூறுதல், 'மலடியாய் இருத்தலே தாய்க்கு இயல்பு' எனக் கூறுங் கூற்றோடு ஒப்பதாய், நகை விளைப்பதாகும். இதனை வேறொரு வகையால் எளிதில் விளக்குவர், அருணந்தி சிவாசாரியர், தம் சிவஞானசித்தியுள்.

'உலகம் உள்ளதும் அன்று: இல்லதும் அன்று; இன்னதெனச் சொல்ல ஒண்ணாத சூனியப் பொருள்' எனின், 'அத்தன்மைத்தாகிய ஒருபொருள் உண்டோ?' என ஐயுற்று வினவுவார்க்கு எங்ஙனம் விடை கூறுவது? 'உண்டு' என்று விடை கூறின், அப்பொருள், 'உள் பொருள்' என்பதாகிவிடும். 'இல்லை' என்றால், 'இல் பொருள்' என்பதாய், முயற் கொம்பு, ஆகாயப்பூ முதலியனபோல, யாதொரு பயனையும் செய்யாது. ஆகவே, சொல்லொணாத பொருள் என்பது, உண்மை இன்மை பற்றிய விவாதத்தில் சிறிதும் பயன்தருவதாகாது, என்பதே அவ்விளக்கம். ஆகவே, அதனை ஒரு கொள்கையாக வைத்துக் கொண்டு, 'உலகம் சூனியம்' என்றும், 'அதனால், அதனைத் தோற்றி நிறுத்தி அழிக்கும் ஓர் இறைவன் உளன் என்பதும் அங்ஙனம் சூனியமேயாம்' என்பதும் பிறவுங் கூறிப் பெருமை படைத்துக்கொள்ளுதற்குப் பயன், முதல்வன் திருவருளை இழந்து, தாம் வேண்டியவாறே சென்று, பிறவித் துன்பம் எய்துதலேயாகும்.

ஆகவே, சூனிய வாதத்தில், 'முதல் தோற்றம் எவ்வாறு உண்டாயிற்று?' என்பதற்கு விடை இல்லை என்பது முதல் தோல்வி. இல்லது தோன்றும் என்ற பொழுது, 'இல்லது எவ்வாறு தோன்றும்' என்பதற்கு, 'இல்லது' என்பதற்குப் பொருள், யாம் கூறும் சூனியமேயாம் என்பது இரண்டாவது தோல்வி. இனிச் சூனியம் என்பது, சொல்லொணாதது என்னும் பொருள் உடையது என்பதும் சிறிதும் பொருந்தாமை நன்கு விளக்கப்பட்டது. இங்ஙனம், பல்லாற்றானும் படுதோல்வி எய்துதலின், 'உலகம் உள்பொருள்' என்பதை மறுத்துச் சூனிய வாதம் கூறுதல் சிறிதும் பொருந்தாமை அறிக.

( தொடரும் )

# நினைப்பென்னும் நெடுங்கிணறு

செஞ்சோற்கோண்டல்,

**வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ.,**

## மனமும் மனிதனும் :

மனிதனுக்குச் சிறப்பு மனத்தினால்; மனம் உடைமையே மனிதன் என்ற பெயர்க்குக் காரணமாயிற்றென்பர். மனத்தானும் மாந்தர்க் குணர்ச்சி என்பது மறைமொழி. மனம் - மனத்தால் நினைவு, நினைவால் சொல், சொல்லால் செயல் என்று இப்படி யாக விரிகின்றது. உலகியலில் ஈடுபட்டு வாழ வேண்டியவன் மனிதன்; பலரோடும் பல்லுயிர்களோடும் கூடிவாழ வேண்டி யவன். ஆதலால் சமுதாய மனப்பான்மை மனிதனுக்கு இயற்கை யிலேயே இறையருளால் உள்ளது. ஆதலின் கூடிவாழும் இயல் புடைய மனிதனை 'சமூகப் பிராணி' (Social animal) என்று கூறுவர். மனிதப் படைப்பே இறைவன் படைப்புக்களில் அனைத்தையும் அளவிடும் அளவுகோலாகத் திகழ்கின்றது.[1] ஆறறிவுடன், மற்ற உயிர்கட் கில்லாத மன உணர்வு எனப்படும் சிந்தனைத் திறத்துடன் - மனிதன் விளங்குகின்றான்.[2] மனிதப் படைப்பின் மேன்மையறிந்தே'அரிதரிதுமானிடராதலரிது என்று சான்றோர் கூறுவாராயினர். மானிடப் படைப்புதரப் பெற்றமை, மனமொழி மெய்களால் இறைவனைச் சிறக்கவழிபட்டு, அரன்பணி புரிவதற்காகவே என்று அருளாசிரியர்கள் அருள்வாராயினர். மனிதப் பண்புகள் நிறைந்த முழுமனிதனாக வாழ வேண்டுவதே இறைவன் திருவுள்ளம். அஃதறிந்து வாழும் மாந்தர் அரியர் என்றே கூறலாம். மனிதப் பண்புகள் குறைந்து கயமைகள் மேவி வாழும் கீழ்நிலை மாந்தர் பலராக, உண்மை மாந்தர் அரியரினும் அரியராய் ஆயினமையின், பகற் பொழு தினும். கைவிளக்கு ஏந்தி, 'நான் ஒரு மனிதனைத் தேடிக் கொண்டிருக்கிறேன்' என்று மெய்யறிவுடையார் ஒருவர்

---

[1] "Man is the measure of all things" - Pythagoras.

[2] Man is a reed, the weekest in nature, but he is a thinkiny reed" - Pascal.

கூறித்திரிந்த மெய்ம்மைச் செய்தி அனைவரும் அறிந்தது.[1] இஃது எதனைக் காட்டுகின்றது ? தலையாய தன்மைகள் வாய்ந்த மனிதர் அரியர் என்பதையே காட்டுகின்றது அன்றோ ?

மனம் - திருக்கோயில் :

மனிதன் தன்மேன்மை உணர்ந்து, படைப்பு நுட்பம் பார்த்து தன் நெறியறிந்து செல்லுதல் வேண்டும். நெறியறிந்து சென்றால் மனிதன் தன் குறிக்கோளை அறிந்தவனாகின்றான். தன் குறிக்கோளை மறந்தவனை மனித இனத்திற் சேர்ந்தவனாக மதிக்கமாட்டார்கள் அறிந்த பெருமக்கள். கடவுளை மனத்தில் எழுந்தருள்வித்து, அப்பெருமான் திருக்கோயிலாக உள்ளத்தை ஆக்கிக்கொள்ளலே அறிவுடைமையாகும். தன் அடியவர்களது உள்ளத்தை அவ்வாறு திருத்தி அவனே ஏற்றுக்கொள்கின்றான் என்று திருமுறைகளிற் காண்கின்றோம்.[2] இவ்விழுப்பம் இறைவனது திருவருள் விழுப்பம் ஆகும். என்னதான் உயிர்கள் தவறு செய்தாலும் உயிர்களை மன்னித்து ஆட்கொள்கின்ற பேரருட்கருணை உடையவனாக உள்ளான் இறைவன். அவனுடைய கருணைக்குத் தகத் தன்னை உருவாக்கிக் கொள்ளல் உயிர்க்கடமையாகும். தன் மனத்தை இறைவனைப்பற்றிய இனிய நினைவுகட்கே ஆற்றுப்படுத்தினால் மனிதன் உயர்கின்றான் ; இன்புறுகின்றான் ; உய்தி பெறுகின்றான்.

நினைப்பவருடைய உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவுடன் விரைந்து சேரும் இயல்புடைவன் அருளாளனாகிய இறைவன் என்பது திருவள்ளுவர் தெளிவுரை. இங்கு மனத்தை மலராக உருவகம் செய்த அருமைப்பாடு அறிந்து மகிழத்தக்க தாகும்.[3]

காயந்தான் இறைவன் திருக்கோயில் ; மனமே அடிமை ; வாய்மையே தூய்மை ; மன மணி இலிங்கம் ; நேயமே நெய்யும்

---

[1] " I am seeking a man " — Diogenes

[2] " பனைக்கை மும்மத வேழமுரித்தவன்
நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன் "

" மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான் "

" மனமுலாமடியவர்க்கருள் புரிகின்ற வகையலாற்
பலிதிரிந்து உண்பிலான் "

" God is mind ; and God is infinite " - Mary Backer Eddy.

[3] திருக்குறள் கடவுள் வாழ்த்து - 2

பாலும் என்று அப்பரடிகள் கூறும் அன்பு வழிபாட்டை அச்சான்றோர் அருள்வாக்கிற் காணலாம்.[1] இங்கு மனத்தின் நலத்தை மாண்புக் காட்சியாகக் கண்டு தெளியலாம்.

"மனம் என்னும் துறை மாகடல் ஏழில் உண்டு; அதனைக் கையால் நீந்தித் தவத்திடையாளர் தம் சார்வத்து வருதல்' அரிய செயல்; 'மனத்திடை நின்ற மதிவாள் உருவி, இனத்திடை நீக்கி இரண்டற வீர்த்துப் புனத்திடை அஞ்சும் போகாமல் மறித்தால், தவத்திடை யாரொளி தோன்றும் என்பது மெய்ம்மை; 'மனவாக்குக் காயத்தால் வல்வினை மூளும்; மனவாக்கு நேர் நிற்கில் வல்வினைமன்னு' என்பது உண்மை; இவை மனநலம் பற்றிய திருமூலர் தெருளுரைகள்[2] மனநலத்தின் மாண்பைத் திருவள்ளுவர் தெளிவுறுத்தும் முறை இனியதாகும்.[3]

இத்தகு மனம் உடைமையாலேயே மனிதர் உடலை இடமாகக் கொண்டு உவக்கின்றான் இறைவன் என்பது நம் மெய்ஞ் ஞானியர் அருள் அநுபவ விளக்கம்; பிண்டலிங்கம் என்ற பகுதியில் திருமூலர் தரும் தெளிவுரை இவ்விடத்தறிந்துணரத் தக்கது.

"மானுடராக்கை வடிவு சிவலிங்கம்
மானுடராக்கை வடிவு சிதம்பரம்
மானுடராக்கை வடிவு சதாசிவம்
மானுடராக்கை வடிவு திருக்கூத்தே"[4]

இதுமட்டுமோ? உள்ளமே கோயில்; உடம்பே ஆலயம்; உடம்பினுள் வாய் கோபுரவாயில்; சீவனே சிவலிங்கம்; ஐம் புலன்களே அழியாவிளக்குகள் என்றும் கூறுவர் அவ்வருட் சித்தர்;

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே"

---

[1] திருநாவுக்கரசர் தேவாரம் - 4-76-4

[2] திருமந்திரம் - 1637, 1638, 2612

[3] திருக்குறள் - சிற்றினஞ்சேராமை - 3, 4, 6, 7.

[4] திருமந்திரம் - 1726

[5] திருமந்திரம் - 1823

எல்லாம் உணர்ந்த பரம்பொருள், மனநலம் உணர்ந்து கோயில் கொள்ளும் எளிமையைத் திருமூலர் அழகுற உரைக்கும் அநுபவ மொழிகள் ஆழ்ந்துணரத்தக்க ஒட்பம் உடையவை ;*

" அதுவுணர்ந் தோனொரு தன்மையை நாடி
எதுவுணராவகை நின்றன ஈசன்
புதுவுணர்வான புவனங்கள் எட்டும்
இதுவுணர்ந் தென்னுடல் கோயில் கொண்டானே "

" கோயில் கொண்டன்றேகுடி கொண்ட ஐவரும்
வாயில் கொண்டாங்கே வழிநின் றருளுவர்
தாயில் கொண்டாற்போல் தலைவன் என்னுட்புக
வாயில் கொண்டீசனுமாள வந்தானே "

" அஞ்சுமுகமுள ஐம்மூன்று கண்ணுள
அஞ்சி னொடஞ்சு கரதலந் தானுள
அஞ்சுடன் அஞ்சாயுதமுள நம்பியென்
நெஞ்சு புகுந்து நிறைந்து நின்றானே "

" பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல்
சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது
ஓவியம் போல உணர்ந்தறிவாளர்க்கு
நாவியணைந்த நடுதறி யாமே "

மனநலமறியா மாந்தர் :

இனி, இந்த மனத்தின் நலமறியாத மாந்தர் நிலை யாதென அறியுங்கால் வருத்தமே தோன்றுகின்றது. மனத்தை மாதேவன் உறையும் திருக்கோயிலாதற்கேற்ற பண்புகளால் திருத்தாமல், பொய்மை யரவுகளும், பொறாமைப் புதர்களும், கயமை முட்செடிகளும், செறிந்த கொடும்புனமாக மனத்தைக் கெடுத்துக் கொள்ளும் மதியினமே மாந்தர் பலர் இயல்பாகக் காண்கின்றோம். சமயச் சான்றோர்களாகிய அருளாசிரியர்கள், காலந்தோறும் இடித்துக் கூறியும், இனிது கூறியும் அவ்வியல்பு மாறிற்றில்லை ; இந்நிலைமாறி மனத்தைக் கோயிலாகக் கொண்டொழுகும் புண்ணியப்பேறு மாந்தர்க்கு வாய்த்தல் வேண்டும்; அந்நிலையும் இறையருளாலன்றி மற்றெதனாலும் வாயாத தொன்றாகும். தீயநினைவுகளால் கெட்டொழியாது திருவருள் நினைவுகளால் மேம்படுதல் வேண்டும்.

---

* திருமந்திரம் - 1722, 1728, 1736, 1459.

**கோடி நினைவுகள் :**

யாக்கை நிலையாதது; புன்புலால் தன்மை உடையது. ஆயினும் எத்தனையோ நினைவுகள்; எவ்வளவோ நினைவுகள்; எவ்வெந்நிலையிலோ பலப்பல நினைவுகள். இப்படி நினைவு வடிவாகவே மனம் இலங்குகின்றது. இதனை எண்ணும்போது திருவள்ளுவர் போன்ற சான்றோர்க்கு நகைப்பே ஏற்படுகின்றது.[1]

"ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல"

இவ்வாறு மனத்தின் நிலையையும் நினைவுகளின் விரிவையும் உடைய மனிதர் வாழ்வுபற்றிக் கருணையுள்ளம்கொண்ட திருஞானசம்பந்தர் எண்ணுகின்றார்கள்; திருப்பருப்பதம் என்னுந் திருத்தலத்துக்கமைந்த வியாழக் குறிஞ்சிப் பதிகத்தில் அமைந்துள்ள ஓர் இனிய திருப்பாடலில் அதனை அழகுற வெளிப்படுத்துகின்றார்கள். மனநலம் உடைய மனித இனத்திற்கே பொதுவான அறிவுரையாக இதனைக் கொள்ளலாம். உலகமாந்தர் நிலையைத் தம்மேலிட்டுக்கொண்டு திருஞானசம்பந்தர் தெளிவுபடுத்துகின்றார்கள்; 'நினைவு என்பது ஒரு நெடுங்கிணறு; அதிலே மனம் என்னும் கயிற்றை வலித்து வலித்து, அயர்ந்தேன் என்று கூறும் பகுதி இது. இவ்விடத்து நினைவு என்பதை நெடுங்கிணறு என உருவகம் செய்துள்ள ஒட்பம் கண்டின்புறலாம்.

**நினைப்பென்னும் நெடுங்கிணறு :**

கிணற்றில் நீர் நிறைந்திருந்தால் அஃது எடுக்க எளிதாக இருக்கும். நினைவுக்கிணறோ ஆழக்கிணறு; எல்லைகாண வியலாத கிணறு. அதிலே மனம் என்பது ஆழ்ந்து ஆழ்ந்து செல்லுகிறது; மீண்டும் உயர்ந்து உயர்ந்து வருகிறது; இவ்வியல்பு மாறுதல் வேண்டும். நினைவுக் கிணற்றை ஆழங்காணும் முயற்சியிலிருந்து விடுபட்டு, இறைவன் திருவருளை எண்ணி எண்ணி, நினைந்து நினைந்து, கண்ணீரில் நனைந்து நனைந்து உய்தி பெறுதல் வேண்டும். இக்கருத்தை அருளாசிரியராகிய திருஞானசம்பந்தர் எடுத்து விளக்கியுள்ள முறை போற்றத்தக்கதாகும்; இவ்வழகிய திருப்பாடல் பின்வருவதாகும்;[2]

---

[1] திருக்குறள் - நிலையாமை-7.

[2] திருஞானசம்பந்தர் - திருப்பருப்பதம் - 8

" நினைப்பெனு நெடுங்கிணற்றை
நின்றுநின் றயராதே
மனத்தினை வலித்தொழிந்தேன்
அவலம்வந் தடையாமைக்
கனைத்தெழு திரள்கங்கைக்
கமழ்சடைக் கரந்தான்றன்
பனைத்திரள் வாயருவிப்
பருப்பதம் பரவுதுமே "

இதனுள் நினைப்பை நெடுங்கிணறு என்று உருவகம்செய்து, மனத்தின் நினைவு அலைகளின் நீளத்தை எடுத்துரைத்தல் சிறப்புடையதாகும்.

" சீர்கெழு சிறப்போவாச் செய்தவ நெறிவேண்டில்
ஏர்கெழு மடநெஞ்சே இரண்டுற மனம்வையேல் "

என்று பிறிதொரு திருப்பாடலில் கூறும் பகுதியும்,[1]

" நோய்புல்கு தோல்திரைய நரைவரு நுகருடம்பில்
நீபுல்கு தோற்றமெல்லாம் நினையுள்கு மடநெஞ்சே!
வாய்புல்கு தோத்திரத்தால் வலஞ்செய்து தலைவணங்கிப்
பாய்புலித் தோலுடையான் பருப்பதம் பரவுதுமே "

என்று இசைக்கும் பகுதியும்[2] இங்கே ஒப்பிட்டுணர்தற்குரியவை. 'இரண்டுற மனம் வையேல்' என்ற அறிவுரையை மறத்தலாகாது; மனம் ஒருமைப்படவேண்டும் நினைப்பெனும் நெடுங்கிணற்றில் மனத்தை வலித்து வலித்து அல்லற்படாது. இறைவன் திருவடி மலர்களில் ஒன்றுபட்டு உயர்தல்வேண்டும்,

'ஒரு நெறியமனம் வைத்துணர் ஞானசம்பந்தன்' என்பர் திருஞானசம்பந்தர்;[3] அங்கும் ஒரு நெறிப்பட்டமனம் என்றே கூறுவது அறியத்தக்கது.

'ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை' என்பர் அப்பரடிகள்.[4] இவ்வாறு ஒன்றியிருந்து நினைவை

---


[1] திருஞானசம்பந்தர் - திருப்பருப்பதம் - 6
[2] திருஞானசம்பந்தர் - திருப்பருப்பதம் - 2
[3] திருஞானசம்பந்தர் - பிரமபுரம் - 10
[4] திருநாவுக்கரசர் - 4-81-2

பதரி கேதார யாத்திரை :



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில் ஸ்ரீகாசி விசுவேசருக்குப் பாலபிஷேகம் செய்தருளல்.

பதரிக்காட்சி:



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களும்
ஸ்ரீமான் ராவல்ஜியும்

இறைவன் திருவடிகளுக்கு ஆட்படுத்தினல், மனம் அத்திருவருள் நினைவிலேயே ஈடுபடும். மனிதன் மனநலத்தாற் சிறந்தவன்; அம் மனநலம் இத்தகைய பண்பு நலத்தாலேயே உயர்ந்து சிறப்புறும்.

## மனிதகுலத்திற்கு அறிவுரை :

மனித குலத்துக்கே அறிவுரையாக அமைந்த இவ்வருளாளரின் உருவகம் - நினைவைக் கிணருக்கி மனத்தைக் கயிருக்கி - வலித்து வலித்து அவலம் கொள்ளாமல், இறைவன் திருப்புகழைப் பரவிப் பரவி வாழ்க, இன்பப் பயன் எய்துக என்ற அறிவுரை - எண்ணி எண்ணி உணர்விற்கொண்டு உய்திபெறத் தக்கதாகும். இந்த நெறியில் மாந்தர் நின்று, ஒன்றியிருந்து நினைந்து, இறையருளின்பம் எய்துவாராக.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam,

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

இந் நன்னுளில் திருமுருகன் சன்னிதானத்தில் சுவாமி தெரிசனம் செய்ய வாய்ப்பு கிடைத்தமைக்கு மிக்க மகிழ்ச்சி. சாதாரணமாக தேவாலயங்கள் சுத்தமாக இருப்பது இல்லை என்பதைப் பொய்ப்பிக்க இந்த தேவாலயத்தில் சகலமும் சுத்தமாக இருப்பது மனதிற்கு மிக்க ஆறுதல். இத் திருஆலயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் நிம்மதியாக ஆண்டவனை வழிபட உதவியதற்கு நன்றி.

(ஒ·ம்.) மரகதம் சந்திரசேகர்,

23—10—63. மத்திய அரசாங்க துணை அமைச்சர்.

## வைத்தீஸ்வரன்கோயிலுக்கு அமைச்சர் திரு. வி. இராமையாவிஜயம்.

தருமையாதீனத்துக்குச்சொந்தமான வைத்தீஸ்வரன்கோயில் ஸ்ரீ வைத்யநாதசுவாமி ஆலயத்துக்கு சென்னை மாநில ரெவின்யூ, மின்சாரம், பொதுப்பணித்துறை அமைச்சர் கனம். வி. இராமையா அவர்கள் 26—10—63 இரவு 8 மணிக்கு விஜயம் செய்தார்கள். தஞ்சைமாவட்ட கலெக்டர் ஸ்ரீ வேதநாராயணன் ஐ. ஏ. எஸ். அவர்களும் உடன் வந்தார்கள். தேவஸ்தானம் கட்டளைசுவாமிகள் முறைப்படி வரவேற்று சுவாமி தரிசனம் செய்துவைத்தார்கள்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள் தேவஸ்தானத்தை நல்லமுறையில் நிர்வகித்துவருவதை கனம் மந்திரி அவர்கள் பாராட்டினூர்கள்.

# சேக்கிழார் திருவாக்கில்-"உலகெலாம்"

உலகெலாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

—பாயிரம் - 1.

ஞானமே முதலா நான்கும் நவையறத் தெரிந்து மிக்கார்;
தானமும் தவமும் வல்லார்; தகுதியின் பகுதி சார்ந்தார்;
ஊனமேல் ஒன்றும் இல்லார்; உலகெலாம் புகழ்ந்து போற்றும்
மானமும் பொறையும் தாங்கி மனை அறம் புரிந்து வாழ்வார்.

—தில்லைவாழந்தணர் பு - 7.

பெருகு வானம் பிறங்க மழைபொழிந்(து)
அருகு நாப்பண் அறிவருங் கங்குல்தான்
கருகு மையிரு ளின்கணம் கட்டுவிட்(டு)
உருகு கின்றது போன்ற துலகெலாம்.

—இளையான்குடிமாறநாயனார் பு - 15.

மனந்தளரும் இடர்நீங்கி வானவர்நா யகர்அருளால்
புனைந்தமலர்க் குழல்பெற்ற பூங்கொடியை மணம்புணர்ந்து
தனம்பொழிந்து பெருவதுவை உலகெலாந் தலைசிறப்ப
இனம்பெருகத் தம்முடைய எயின்மூதூர் சென்றணைந்தார்.

—மானக்கஞ்சாறநாயனார் பு - 36.

இவ்வ ளந்தரு பெருந்திரு நாட்டிடை என்றும்
மெய்வ ளந்தரு சிறப்பினால் உலகெலாம் வியப்ப
எவ்வு கங்களும் உள்ளதென் றியாவரும் ஏத்தும்
கைவி ளங்கிய நிலையது காஞ்சிமா நகரம்.

—திருக்குறிப்புத்தொண்டநாயனார் பு - 48.

மலர்மழை பொழிந்த தெங்கும்; வானதுந் துபியின் நாதம்
உலகெலாம் நிறைந்து விம்ம உம்பரும் முனிவர் தாமும்
குலவினர்; கணங்கள் எல்லாங் குணலையிட் டனமுன் நின்ற
தொலைவில்பல் சுற்றத் தாருந் தொழுதஞ்சி அகன்று போனார்.

—காரைக்காலம்மையார் பு - 51.

சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்துவெண் ணீற்றொளி போற்றிநின்(று)
ஆதி யார்அரு ளாதலின் அஞ்செழுத்
தோதி ஏறினர் உய்ய உலகெலாம்.

—திருஞானசம்பந்தர் பு - 216.

அளவிலா மகிழ்ச்சி காட்டும் அரும்பெரு நிமித்தம் எய்த
உளமகிழ் வுணருங் காலை உலகெலாம் உய்ய வந்த
வளரொளி ஞானம் உண்டார் வந்தணை ந் தருளும் வார்த்தை
கிளர்வுறும் ஓகை கூறி வந்தவர் மொழியக் கேட்டார்.

ஷை 643.

மீனவற் குயிரை நல்கி மெய்ந்நெறி காட்டி மிக்க
ஊன்மாஞ் சமணை நீக்கி உலகெலாம் உய்யக் கொண்ட
ஞானசம் பந்தர் வாய்மை ஞாலத்திற் பெருகி யோங்கத்
தேனலர் கொன்றை யார்தந் திருநெறி நடந்த தன்றே.

ஷை 859.

உலகெலாம் உய்ய உறுதியாம் பதிகம்
உரைத்துமெய் உணர்வரு ஒருமை
நிலவிய சிந்தை யுடன்திரு வருளால்
நீங்குவார் பாங்குநற் பதிகள்
பலவுமுன் பணிந்து பரமர்தாள் போற்றிப்
போந்துதண் பனிமலர்ப் படப்பைக்
குலவும்அக் கொங்கிற் காஞ்சிவாய்ப்
பேரூர்குறுகினர் முறுகும்ஆ தரவால்.

—ஏயர்கோன்கலிக்காமநாயனர் பு - 88.

வாங்கு நீள்வலை அலைகடற் கரையில்வந் தேற
ஓங்கு செஞ்சுடர் உதித்தென உலகெலாம் வியப்பத்
தாங்கு பேரொளி தழைத்திடக் காண்டலும் எடுத்துப்
பாங்கு நின்றவர் மீனென்று படுத்தனம் என்றார்.

—அதிபத்தநாயனர் பு - 16.

தமனியப் பலகை ஏறித் தந்திரிக் கருவி வாசித்(து)
உமையொரு பாகர் வண்மை உலகெலாம் அறிய ஏத்தி
இமையவர் போற்ற ஏகி எண்ணில்தா னங்கள் கும்பிட்(டு)
அமரர்நா டாளா(து) ஆரூர் ஆண்டவர் ஆரூர் சேர்ந்தார்.

—திருநீலகண்டயாழ்ப்பாணநாயனர் பு - 7.

மாசில் வெண்மைசேர் பேரொளி
உலகெலாம் மலர்ந்திட வளர்மெய்ம்மை
ஆசில் அன்பர்தஞ் சிந்தைபோல்
விளங்கிய அணிகிளர் மணிவாயில்
தேசு தங்கிய யானையும்
புரவியும் இழிந்துசே ணிடைச்செல்வார்
ஈசர் வெள்ளிமா மலைத்தடம்
பலகடந் தெய்தினர் மணிவாயில்.

—வெள்ளானைச்சருக்கம் - 40.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

ஷை 53

---

## சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தில்

## வைத்தீஸ்வரன்கோயில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும்விழா

3—11—63 கிருத்திகையன்று வைத்தீஸ்வரன்கோயில் ஸ்ரீசெல்வமுத்துக்குமாரசுவாமிக்கு, நிலைய அன்பர்கள் சார்பில் நடைபெற்ற அபிஷேக சகஸ்ரநாம அர்ச்சனைப் பிரசாதங்களும் சந்தனக்குழமபுப் பிரசாதமும் பிரசார நிலையத்தில் 4—11—63 மாலை 7 மணிககு வித்துவான், திரு. ஜி. எம். முத்துசாமிபிள்ளை B. A., ( I . S. Retd. ) அவர்கள் தலைமையில் பிரார்த்தனை நிகழ்த்தி அன்பர்கட்கு வழங்கப்பட்டன. திரு. பி. சுவாமிநாதன் வேலூர்த் தேவாரம் திருப்புகழ், பிள்ளைத்தமிழ்களை ஓதிப் பிரார்த்தனை நிகழ்த்தினார். தலைவரவர்கள் வேலூர்ப் பிரசாதப் பெருமைபற்றியும சென்னைவாசிகட்கு இப்பிரசாதம் மாதந் தோறும் கிடைத்துவரும் சிறப்புப்பற்றியும், விளக்கிப் பேசினார்கள். ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும கூறுகையில் உறுப்பினர்களாக உள்ள அன்பர்கள் புதிய ஆண்டிற்குள்ள காணிக்கை ரூ. 12—00ம் செலுத்தும்படியாக தெரிவித்தார்கள்.

## ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின்

# கேதாரநாதம்-பதரிநாதத் தலயாத்திரை

திரு. அ. கல்யாணசுந்தர தேசிகர்

தருமை ஆதீனம் 25-ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில்இவ்வாண்டும், மூன்றுவது முறையாகத் திருக்கேதாரம் யாத்திரை செல்லவேண்டுமென்று திருவுளம்பற்றினுர்கள். தருமையாதீனம் திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி ஆலய ஜீரணோத்தாரண வேலைகள் முடிவடையும் நிலையில் இருந்தபடியால் அவைகளை முடித்து அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் செய்வித்துப் புறப்பட வேண்டியதாயிற்று, 6—9—63-ல் மகா கும்பாபிஷேகமும் மிகச் சிறப்பாக நிறைவேறியது.

வழக்கம்போலப் பிரார்த்தனைகள், அபிஷேக ஆராதனைகள் செய்யப்பட்டன. தருமை ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கு மூன்றுவதுகோடி அர்ச்சனையும் முடிந்தது. 12—9—63 அன்று மௌன உபவாசநாள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானத்தில் யாத்திரைக்கு எழுந்தருளினுர்கள். மறுநாள் சென்னையில் ரயிலேறி கல்கத்தா வழியாக ஸ்ரீகாசி கேதாரகட்டம் ஸ்ரீ குமாரசுவாமி மடத்துக்கு எழுந்தருளினுர்கள். திருச்சி திருக்குறள்வேள் திரு.ஜி. வரதராஜ பிள்ளை பி.ஏ. அவர்களும், ஆதீனத்திருமுறைவாணர், சிவாசாரியார் பணியாளர்கள் உடன் வந்தார்கள். வழியெல்லாம் திருமுறைப் பாராயணம் சிவாகமத்தோத்திரங்கள் முதலியன முழங்கிய வண்ணம் இருந்தது.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் ஸ்ரீ காசி வரும் செய்தி தெரிய வந்ததும் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் ஸ்ரீகாசிக்கு உத்தரவு அனுப்பியிருந்தபடியே வழக்கம்போல ஸ்ரீ காசியிலுள்ள குமாரசுவாமி மடத்து ஏஜண்டு ஸ்ரீ வி. கல்யாணசுந்தரம் பிள்ளை ஸ்ரீ வாரணுசி ரயிலடியிலேயே வரவேற்று மாலையிட்டு வணங்கி அழைத்துச் சென்றுர். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் மடத்திற்கு எழுந்தருளியானதும் கொலுவிலமர்த்தி மிகச் சிறப்பாக வழிபாடுகள் செய்தார். உடன் வந்திருந்தவர்களையும் சிறந்த முறையில் உபசரித்தார். ஸ்ரீகாசியில் தங்கியிருந்தவரை ஸ்ரீகுமாரசுவாமிமடத்து உபசரிப்புத்தான்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில் ஸ்ரீ கேதாரக் கட்டத்தில் கங்கா ஸ்நானமும் ஸ்ரீகேதாரேஸ்வரர் வழிபாடும் ஸ்ரீ காசி விசுவேசர், அன்னபூரணு, விசாலாட்சி, தண்டபாணி

முதலிய மூர்த்திகள் வழிபாடும் செய்தருளினார்கள். பிரயாகைக்கு எழுந்தருளி சுத்த கங்கா ஸ்நானம், தீர்த்தராஜ் (பிரயாகை) யமுனா, கங்கா, சரஸ்வதி சங்கம ஸ்நானம் முதலியன முடித்து கங்கை எடுத்து வந்தருளினார்கள்.

19...9—63 குருவாரத்தன்று ஸ்ரீ காசி விசுவேசருக்கும் ஸ்ரீ கேதாரேஸ்வரருக்கும் பாலபிஷேகம் செய்து வழிபட்டார்கள். அடியார்களுக்கு அன்னம்பாலிப்பு (பண்டாரா) முறையாக நடைபெற்றது.

20—9—63 கேதாரத்துக்குச் செல்ல எழுந்தருளினார்கள். முதல் உத்தேசம் கோடத்வாராவழியாகச் செல்வதென்பது, ஆனால் அங்குச்சென்றதும் "ரஸ்தாபில்குல் பந்த்ஹை; பஸ்நை சல்தாஹோ" ("வழியில் மலைச்சரிவு ஏற்பட்டுவிட்டது; பஸ் செல்லாது") என்று சொல்லிவிட்டார்கள்; கோடத்வாரா வழி ஆண்டு முழுவதும் செல்லத்தக்கதான மேட்டுவழி. அந்த வழியிலேயே இந்த நிலையானால் ரிஷிகேஷ் ஸ்ரீநகர் வழியைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. ஏமாற்றத்தோடு ஹரித்துவாரத்துக்குச் சென்றோம். அங்கு மதராசி தர்மசாலாவில் தங்கினோம். மனநிறைவில்லை, ரிஷிகேசத்தில் சென்று கோபால் எப்பொழுது மறுபடியும் பஸ் செல்லக்கூடும் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அவ்விதமே சென்று கேட்டதில் ஒரு வாரத்தில் வழி சரியாகிவிடக்கூடும். 4, 5 நாட்கள் கழித்துக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று பஸ் கம்பெனியில் சொன்னார்கள். பிறகு லக்ஷ்மண ஜூலா சென்று சொர்க்காஸ்ரமம், சிவாநந்தாஸ்ரமத்தில் உள்ள ஸ்ரீகாசி விஸ்வநாதராலயம் இவற்றில் தரிசனம்செய்துகொண்டு ஹரித்துவாரத்துக்கு மீண்டும் எழுந்தருளினார்கள். கங்காஸ்நானம், பூஜை வழிபாடுகள் முதலியன முறையாக நடைபெற்றன. அடிக்கடி விசாரித்ததில் "நாளை அல்லது மறுதினம் பஸ் கட்டாயம் செல்லக்கூடும்" என்றே பதில் வந்தது. எப்படியும் திருக்கேதாரம் செல்லவேண்டிய உறுதி வலுவாகி வளர்ந்தது.

ஆனாலும் தருமையில் நவராத்திரியில் வழக்கமாக நடைபெறும்சதசண்டி யாகத்துக்கு முன்னதாகக் காலத்தில் தருமைக்கு மீண்டும் எழுந்தருளியாக வேண்டுமே என்ற கவலையும் இல்லாமல் இல்லை. கேதாரநாதர் பாதாரவிந்தமே துணை என்றாலும் தாயின் துணையும் வேண்டாமா. ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்கா தேவியை நோக்கிச் சிறந்த வழிபாடு நடைபெற்றது. வழிபாடு நடைபெற்றுவரும்பொழுது கேதாரம், ரிஷிகேசத்தில் உள்ள

கார்த்திகேய ஆஸ்ரமத்து சுவாமிகள் ஷண்முகாநந்தா வந்தார்கள். "அநேகமாக வெள்ளிக்கிழமை பஸ் செல்லக்கூடும்" என்று தெரிவித்தார்கள். வழிபாடு முடிவடையும் தருவாயில் நல்லசெய்தி வந்தது. வெள்ளிக்கிழமையில் பஸ் செல்லும்செய்தி தெரிந்ததும் சனியன்று புறப்படுவதாக முடிவுசெய்து கொள்ளப் பட்டது. இதன் நடுவில் சிவாநந்தாஸ்ரமத்தில் இப்போது தலைவராக இருக்கும் ஸ்ரீமத் பரிவிராஜகாசாரிய சித்தாந்தசுவாமி மகராஜ் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் அந்த ஆஸ்ரமத்து ஸ்ரீ விசுவநாதராலயத்துக்கு எழுந்தருளி தரிசனம்செய்து வந்தது தமக்குத் தெரியாமல் போய்விட்டதை அறிந்து வருந்தி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்துக்கு மிக உருக்கமான கடிதம் எழுதி அவ்வாசிரமத்து உபசரிப்பாளர் ஸ்ரீமத் ஷண்முகாநந்தா அவர்களை அனுப்பி ஆஸ்ரமத்துக்கு மீண்டும் ஒருமுறை வருதல் வேண்டும் என்ற அழைப்பும் விடுத்தார்கள். கேதார தரிசனத்தில் மனம் ஈடுபட்டிருக்கும்பொழுது வேறெதிலும் அதனைத் திருப்ப முடியவில்லை.

வியாழன்று விசாரித்ததில் பஸ் செல்வதுபற்றி முன்சொன்னது போலவே இரண்டு மூன்று நாட்களில் வழி திறக்கலாம் என்றே பதில் வந்தது. இது ரிஷிகேச வழி பற்றியது. கோடத்வாரா வழியில் பஸ் செல்வதாக சிலர் சொன்னார்கள். உடனே கார்த்திகேயாஸ்ரமத்து சுவாமிகளைக் கோடத்வாராவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதைமுடித்துவைக்கவேண்டி பிரார்த்தித்து வெள்ளியன்று மீண்டும் துர்க்காம்பிகைக்கு வழிபாடுகள் நடைபெற்றன. ஆனால் உறுதியைச் சோதிக்க எண்ணிய பெருமான் வேறுவிதமான செய்தி எட்டச்செய்துவிட்டார். ஸ்ரீமத் ஷண்முகாநந்த சுவாமிகள் கோடத்வாரா வழியும் சரியாக இல்லை துன்பத்தைப் பொருட்படுத்தாது சென்றாலும் ருத்ரபிரயாகை செல்லலாம். மேலேவழியில் பல இடங்களில் மலைச்சரிவுகளும் மரங்கள் சாய்ந்து விழுந்து கிடத்தலுமாக இருக்கிறது. ஆகையால் கேதாரம் செல்ல வியலாது. பதரிவழியில் சோதிமடம் வரை செல்லலாம். பதரி தரிசனம் வேண்டுமானால் செய்ய இயலும் என்று செய்திகொண்டு வந்தார்கள். மனம் மயங்கிற்று, திருவருள் இருந்தவாறிதுவானால் மனிதனிலையில் நாம் செய்வதியாது என்று முடிவு செய்து கொண்டு மீண்டும் ஸ்ரீகாசி சென்று தருமைக்கு மீள்வதென்று காசிக்கு ரயில் டிக்கட் வாங்க நிலையம் சென்று விசாரித்ததில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் செல்லக்கூடிய உயர்வகுப்பு இடம் ஞாயிறு இரவு செல்லும் வண்டியில் கிடைக்கும். அதற்கும் டிக்கட் உடனேவாங்க வேண்டும் என்றார்கள். உடனே புறப்பட முடியவில்லையே

என்ற ஏமாற்றம்தான், என்ன செய்யக்கூடும். அப்பொழுதிருந்த நிலையில் ஞாயிறு செல்வதைத்தவிர்த்து வேறுவழியில்லை. அவ்விதமே டிக்கட்வாங்கி ரிசர்வ் செய்யப்பட்டது. திருவுளத்தில் கேதார நாதர் தரிசனம் கிடைக்காமல் இம்முறை தவறுகிறதே என்று ஏக்கம் ஏற்பட்டிருந்திருக்கிறது. அன்று மாலையில் பிரும்ம குண்ட தரிசனம் செய்துகொண்டு கங்கையில் அக்கரை வழியே சிறிது நடந்து சென்றோம். இரவு 7 மணிக்குத் தர்ம சாலைக்கு வந்து சேர்ந்தோம். அங்கே கேதார பண்டா ஸ்ரீ கணேஷ்சங்கரவயர்பேய் கேதார நாதர் பிரசாதத்தோடு "அருளிப்பாடு" என்றார். கரைகாணாத ஆனந்தம்.

திருவருளையே கண்ணுகக்கண்டு திருவருளையே நம்பி அவ்வழியிலேயே வாழும் குருபரம்பரைக்குத் திருவுளக்கசிவு ஏற்படலாமா, பெருமான் திருவிளையாடல்களில் இதுவும் ஒன்று. ஆனாலும் நேரில்கண்டு தரிசிக்க இயலுமா என்று பண்டாஜீயைக் கேட்டோம் "பில்குல் சும்தாஹை; ஆராம்ஸே சாகந்தேஹ்ஹை" (வழி நன்றாக இருக்கிறது, சிரமமில்லாமல் செல்லலாம்) என்று சொன்னார், கோடத்வாரா வழியில் ஒரு சிறிது (ஒரு பர்லாங்) கடந்து செல்லவேண்டும். அதற்கு மாற்று பஸ் கிடைக்கும் என்றார். திருவருளை எண்ணி எண்ணி மகிழ்ந்து பிரார்த்தனை செய்து ஒரு சிறிது மயக்கம் ஏற்பட்டதற்கு மன்னிப்புக் கோரிப் பாராயணங்கள் நடைபெற்றன. கேதாரம் செல்ல உறுதியான ஏற்பாடுகள் செய்யப்பட்டன, சனியன்று கோடத்வாராவழியாகச் செல்ல டிக்கட் வாங்கப்பட்டது. உடன் வந்தவர்களில் இருவருக்கு உடல் நலமில்லாமையால் ஸ்ரீகாசிக்கு அனுப்பி விட்டு கார்த்திகேய மடம் சுவாமிகள் மதராசி தர்ம சாலா மானேசர் முதலியோர் உடன்வர புறப்பாடாயிற்று. மதராசி தர்ம சாலா அதிபர் சென்னை பெருமாள் செட்டி & Sons. ஸ்ரீ எம் பெருமாளுர்செட்டியார் மானேஜர் உடன்வர தந்திமூலம்அநுமதி அனுப்பினார்கள். கேதாரபதிகபாராயணத்தோடு புறப்படாயிற்று திருவுளக்கசிவு ஏற்பட்ட நேரங்களில் உறுதி பயக்க அவ்வப் பொழுது சுவப்பனத்தில் அடியார்கள் திருவுருவிலும் அம்மையின் திருவுருவிலும் வந்து வந்து களைப்பு மாற்றி உறுதி கூறினாலும், நடப்பில் அதற்கு மாறான செய்திகள் கிடைத்து வந்தது வியப்பை அளித்தது, ஆனாலும் உறுதி சோதித்து நிலை அறிந்து மனம் மயங்கும் நேரத்தில் அருளிப்பாடு பண்டாஜி மூலம் அருளிச் செய்ததில் எல்லோரும் உணர்ச்சி வசமானோம்.

மற்றொரு நல்ல செய்தி, கயிலாயத்திலேயே பல ஆண்டுகள் அரை நிர்வாணத்தோடு தங்கி மவுன விரதத்தோடு ஒருநாள் விட்டு மறுநாள் (ஒரே நாளில்) கயிலையை முழுவதும் வலம்

வந்து உறைப்பேறிய மவுன சுவாமிகள் என வழங்கப்படும் முக்தாநந்தா ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் திருக்கேதார தரிசனம் இவ்வாண்டில் வரக்கூடும் என்று எதிர்நோக்கி யிருந்தவர்கள் வழியில் ஸ்ரீநகரில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தை எதிர் கொண்டு உடன்வரும் நோக்கத்தோடு காத்திருப்பதாக வந்த செய்தி. இவ்விதமாக மிக நல்ல தவவலிமையும் உறுதியுமுடைய அடியார்கள் உடன் வரத் திருக்கேதார யாத்திரை மீண்டும் சிறப்பாகத் தொடங்கிற்று. கடந்த 40 ஆண்டுகளாகக் காணாத இமயத்தில் பெய்த ஒரு பெருமழையால் (ஒரு நாளில் 14 மணி நேரம் பெய்த கடுமழையால்) கங்கையிலும், யமுனையிலும் பெருக் கெடுத்து பெருவெள்ளம் ஓடியது. இமயத்தில் உள்ள பல வழி களிலும் மலைச்சரிவுகளிலும் பெரு மரங்கள் சாய்ந்தும் அளப்புக் கள் ஏற்பட்டன. ரூர்க்கி, மீரட்போன்ற பெரும் நகரங்களில் மக்கள் அல்லலுற்றார்கள். இதுவரை காணாத ஊழிக்காலத்து வெள்ளம் (Deluge) வந்ததாகப் பத்திரிக்கைகளில் செய்திகள் வந்தன. மழைப்பருவம் முடிந்து மலர்பூத்து அழகிட்டு இருக்க வேண்டிய இமயம் பருவம் பின் தங்கியதால் மலரில்லாமல் பச்சைப் பசேலென்று இருக்கிறது. துர்க்காபூஜை வடநாட்டி லும் இரண்டுபட்டிருக்கிறது இவ்வாண்டில். ஆனாலும் துர்க்கா பூஜைக்கு மக்கள் சிறப்பான ஏற்பாடுகள் செய்யத் தொடங்கிய தில் இந்த மழை சிறிது சோர்வு காட்டியது. ஆனால் அந்த ஒரு நாள் தவிர்த்து பிறகு மழை இல்லை. இந்த நிலையில்தான் கேதார யாத்திரை மீண்டும் தொடங்கப்பட்டது.

கோடத்வாரா வந்து அங்கு பஸ் ஏறி ருத்ரப்பிரயாகை வந்தடைந்தோம். இமயத்தில் இவ்வாண்டு மழைப் பருவம் முதலில் தொடங்கிப் பிறகு மீண்டும் மழை வந்தபடியால் யாத்ரிகர்கள் மிகக்குறைவாக இருந்தது, ஆகையால் கடைகளில் சுறுசுறுப்பில்லை.

ருத்ரப்பிரயாகையிலிருந்து குண்டசட்டிவரை செல்லும் பஸ் செல்லவில்லை. நடந்து செல்லவேண்டுமென்றார்கள். உத்தரவு கொடுத்து அழைத்துச் செல்லும் திருவருள் இங்கும் ஒரு சிறிது சோதனை செய்து காட்டியது. பஸ் கம்பெனியில் கேட்டதில் வழியில் வேலை நடந்து வருகிறது. அதிகாரிகள் உத்தரவு கொடுத்தால் பஸ் விடலாம் என்றார்கள். நேரே அதிகாரிகளை அணுகித் தென்னாட்டிலிருந்து குருமகராஜ் வந்திருக்கிறார்கள் கேதார தரிசனம் ஆகவேண்டும், பஸ்விட அனுமதி கொடுத்தால் அது இயலக்கூடும் என்று சொன்னோம். ஒரு பெரிய குரு முதல்வர் யாத்திரைக்குத் தன்னால் இடையூறு கூடாது என்று எண்ணினார். உடனே அலுவலக முத்திரையிட்டு அனுமதி வழங்கினார். மத்தியானம் 12 மணிக்கு எங்கள் முயற்சியால்

இரண்டு பஸ்கள் புறப்பட்டன. மக்கள் வாழ்த்தினர். ஆனாலும் வழியில் பல இடங்களில் வேலை முடிந்தும் முடியாததுமாக இருந்தது. எங்களோடு வந்த மூட்டைத்தூக்கிகளை விட்டு வழியில் கிடந்த கற்களை அப்புறப்படுத்தி வழிசெய்துகொண்டு பீரிசட்டி வந்து சேர்ந்தோம். இது குப்தகாசியிலிருந்து 6 மைல் தொலைவில் உள்ளது. பிறகு கால்நடை தொடங்கியது. குண்ட் சட்டி வருவதற்குள் இருட்டியது ஆகையால் அங்கு ஒரு கடை மாடியில் தங்கினோம். பெரும் தூறல் சிறிதுநேரம் பெய்தது. மேலே செல்லவேண்டுமே மழைபெய்கிறதே என்று எண்ணினோம். ஆனால் அம்மழை இயல்பாக இருக்கவேண்டிய குளிரைக் குறைத்தது என்பது பிறகு தெரியவந்தது.

மறுநாள் குப்தகாசி வந்து அங்குள்ள ஆலய வழிபாடு செய்து குதிரைகள் அமர்த்தி அவற்றில் அமர்ந்து யாத்திரையில் மேலே சென்று ராம்பூரில் இரவு தங்கினோம். மறுநாள் அதிகாலையில் புறப்பட்டு கௌரிகுண்டத்தில் உள்ள வெந்நீரூற்றில் திருமஞ்சனமாகி அநேகதங்காவதேஸ்வரரை வழிபட்டு மீண்டும் கேதார வழியில் மேலே செல்லலானோம். ராம்பாடா அருகில் செல்லும்பொழுது ஒரு சிறிது நேரம் சிறு தூறல். அருள் மழை. மாலை 6 மணிக்குத் திருக்கேதாரம் சென்றடைந்தோம். மலையெழு கொழுந்தாயுள்ள அத் திருக்கோயில் தோற்றமே நம்மை உருக்கி தன்வயமாக்கும் தகையது. ஒரு கல் தொலைவிலிருந்தே. கூலி ஆட்களுக்கும் அத்தகைய உணர்ச்சி மேலிடுவதைக் காணலாம். அந்த நிலையில் திருக்கேதாரம் சென்று மலையில் கேதாரநாதரைத் தரிசித்து மகிழ்ந்தோம். எல்லையில்லா ஆனந்தானுபவமேலீட்டால் கண்களில் நீர்மல்க பேச்சிழந்து மவுன நிலையில் வழிபாடு நடைபெற்றது. அங்கு ஆண்டு முழுவதும் தங்கி "கேதாரநாதரை விடச் சிறந்த கடவுள் இல்லை. கேதாரத்தை விடச் சிறந்த பிறிதொரு தலமில்லை" என்ற உறுதிகொண்டபலகாரி பாபா என்ற மகானைக்கண்டு அவர்சொல்லிய இனிய நல்ல மொழிகளைக்கேட்டு இரவு ஓய்வு எடுத்துக்கொண்டோம். மறுநாள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானத்தில் மவுன உபவாசநாள். (குருவாரம்) மந்தாகினி கங்காபூஜை, கேதாரநாதர் அபிஷேக ஆராதனைகள் அடியார்களுக்கு அன்னம்பாலிப்புக்கள் நடைபெற்றன. அத்திருவருளையே வழுத்தி பதரி யாத்திரை மேற்கொள்ளப்பட்டது. 8—10—63 அன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் பதரியில் தரிசனம் செய்த பின்னர் தருமைக்கு எழுந்தருளினர்கள்.*

---

*பதரிநாதத் தலயாத்திரை பற்றிய செய்திகள் அடுத்த இதழில் தொடர்ந்து வெளிவரும்.

# புத்தக விமர்சனம்*

## அருள்: தியாகராசன்

திருக்கயிலாய யாத்திரை என்ற நூலினை முதற்கண் விமர்சனத்திற்கு எடுத்துக்கொள்வோம். இந்நூல் தருமபுர ஆதீன குரவர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அடியார்களுடன் திருக்கயிலாயத்தைத் தரிசித்துத் திரும்பிய வரலாற்றை இந்நூல் விளக்கமாகவும், விரிவாகவும் எடுத்துக் கூறுகிறது. தருமையாதீனத்தைத் திருக் கயிலாய பரம்பரையாக உரிமையோடு கூறுவர், ஆகவே அவ்வுண்மையை உறுதிப்படுத்தக் குருமணி அவர்கள் திருக் கயிலாயத்திற்கு யாத்திரை செய்ததை நூல் வடிவில் வெளி யிட்டுள்ளமை மிகவும் பொருத்தமானதும் பயன் படக்கூடியதும் ஆகும்.

இந்த யாத்திரை நூலினை குருமாமணியவர்களுடன் திருக் கயிலாயத்திற்கு உடன் சென்று திரும்பிய சைவத்திரு. ஏ. கலியாண சுந்தர தேசிகர் அவர்கள் நூல் வடிவில் எழுதி உலகிற்குத் தந்துள்ளார். (சைவத்திருமுறைகளில் உள்ள இயற்கையான பற்றும் பயிற்சியும் பல நூல்களை எழுதிய அனுபவமும் "திருக்கயிலாய யாத்திரையை" ச் சிறந்த முறையில் எழுதப் பெரிதும் உதவின என்று சொல்லலாம்)

திருக்கயிலாய யாத்திரை செய்ய விரும்புவோர்க்கு இந்நூல் ஒரு வழிகாட்டியாகவும், யாத்திரை செய்ய வாய்ப்பில்லாதவர் களுக்கு நல்லதொரு வரப்பிரசாத மாகவும் அமைந்துள்ளது. இந்நூலினை வாசிப்போர் திருக்கயிலாயத்திற்குச்சென்று கயிலை நாதனைக் காண்பது போன்ற உணர்வினைப் பெறுவர் என்பது திண்ணம். (மேலும் யாத்திரை செய்யப் பொன்னும் பொருளும் இல்லாதவர்கள் இல்லத்தில் இருந்தவாறே திருக்கயிலாயத்திற்கு யாத்திரை செய்து கயிலை நாதனைத் தரிசித்து அருள் பெற்றுத் திரும்ப இந்நூல் உதவும் என்று கூறின், அது மிகையாகாது)

திருக்கயிலாய யாத்திரையை எழுதிய ஆசிரியர் வாசகர்களைத் தம்முடன் திருக்கயிலாயத்திற்கு அழைத்துச் செல்கின்றார். செல்லும் வழியில் பல ஊர்களைக் காட்டுகின்றார். பல வீதங்களைத்

---

* இலங்கை வானொலியின் மதிப்புரை; 30-8-63-ல் ஒலிப்பரப்பியது.

தரிசிக்க வைக்கின்றார். ஆங்காங்கு வசிக்கும் மக்களின் வாழ்க்கையையும் பழக்க வழக்கங்களையும் கண்டு களிப்படையச் செய்கின்றார். ஆசிரியர் கயிலாயத்தைக் காட்டும்போது எம்மை அறியாமலே கயிலாய நாதனுக்கு ஜே!'' கயிலை மலையானே போற்றி போற்றி ., என்று வாய்விட்டு உரக்கச் சத்தம் இடுவோம் என்றுதான் சொல்ல வேண்டும்.

திருக்கயிலாய யாத்திரையை வாசிக்கும்போது கயிலைக்கு யாத்திரை செய்வது போன்ற ஓர் உணர்வினையும் கயிலைநாதனை வலம் வந்து வணங்குவது போன்ற ஒரு நினைவினையும் பெறுவோம். இன்னும் கௌரி குண்டத்தில் தீர்த்தம் ஆடுவது போன்றும் சரோவரத்தைத் தரிசனம் செய்வது போன்றும் மானச நினைவுகள் ஏற்படும். திருக்கயிலாயம் தெய்வபூமியல்லவா? அதனைத் தீண்டினுர் உடல் பூரிப்பர். உள்ளம் புனிதமடைவர். ஆம் திருக்கயிலாயத்தைத் தரிசிப்போர் தெய்வத்தன்மையைப் பெறுகின்றார்கள் என்பது நூல்களது துணிபு ஆகும். திருக்கயிலாயத்தைத் தரிசியாமலே உடலும் உள்ளமும் புனிதமடைந்து தெய்வத்தன்மை பெறுவது போன்ற ஓர்உணர்வினைப் பெறுவார்களென்று கூறின் அது மிகையாகாது.

திருக்கயிலாய யாத்திரைக்குப் புறப்பட்ட அடியவர்களின் காட்சியை ஆசிரியர் சிவசின்னங்களோடு வைதீக உடையும் நடையும் உடையவர்களாக நகரிலும் இரயிலடியிலும் வரிசை வரிசையாகச் சென்ற காட்சி ஒரு சைவ அணிவகுப்புப்போலத் தோன்றிற்று '' என்று வருணிக்கின்றார். இவ்வாறு குருமாமணி சந்நிதானம் அவர்கள் தலைமையில் யாத்திரை தொடங்கியதைத் தருமையிலிருந்து சென்னை வரைக்கும் சிறப்பாக எழுதியுள்ளார். அதன் பின்னர் சென்னையிலிருந்து காசிவரை செய்த யாத்திரையையும், காசியிலிருந்து கயிலைவரை செய்த செலவையும் குறிப்பிட்டுக் கயிலைக் கடவுளைக் கண்முன் நிறுத்தித் தரிசிக்க வைக்கும் திறன் போற்றுதற்குரியதாகும்.

கயிலைவாசிகள் என்ற பகுதியில் அப்பர்சுவாமிகள் கயிலைக்கு யாத்திரை செய்ததையும் அவர் கண்ட கயிலைக் காட்சியையும் எடுத்துக் கூறுகின்றார். மேலும் ஔவையார் கயிலை கண்ட முறையையும் கண்ணனின் கயிலை யாத்திரையையும் எடுத்துக் கூறித் திருக்கயிலாய யாத்திரையின் மகிமையைத் தெளிவுபடுத்தயுள்ளார். நூலின் இறுதியில் திருக்கயிலாய யாத்திரையின் பெரும்பயன் சுருக்கமாகக் கூறப்படுகின்றது. '' இந்த

யாத்திரையில் பல மக்களோடு பழகியும், பல விடங்களில் தங்கியும் ஏறியும் இறங்கியும் விழுந்தும் புரண்டும், நடந்தும் மெலிந்தும், நம் உடலும் உள்ளமும் பண்பட்டு விடுகின்றன. உள்ளத்தில் கயிலைநாதன் இடம் பெற்றுவிடுகின்றான், கடவுள் நம்மோடு உடனாய் இருந்து நமக்குக் கருணை செய்யும் பாங்கை இதில் உணரலாம்'' .........என்று சுருக்கமாக எழுதப்பட்டு உள்ளது. இந்தப் பயனை நூலில் நுழைவோரும் பெறுவர் என்பது திண்ணம்.

இந்நூலில் இறுதியின் சிவரகசியத்தில் கூறப்படும் மகா கயிலாய மகிமைச் சாரமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இன்னும் கயிலாய யாத்திரை செய்ய விரும்புவோர்க்கு வழி விபரங்களும் பிறவும் விளக்கப்பட்டுள்ளன. இதில் இடம்பெறும் 91 படங்கள் வாசிப்பவர்கள் ஆர்வத்தை அதிகமாக்கும். இறுதியிலுள்ள திருக்கயிலாய பதிகங்கள் கயிலைக் கடவுளைப் பாடிப் பயன்பெற உதவும், இதுவரை வெளிவந்த யாத்திரை நூல்களில் இதுவே பெரியதும் சிறந்ததுமாகும். இதன் விலை குறிக்கப்படவில்லை. வெளியிட்டோர், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் சென்னை தருமையாதீன சமயப் பிரசார நிலையம் சென்னை 18.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Kambahareswaraswami Devasthanam, Thirubuvanam.

Happy and fortunate to visit this temple again, soon after Kumbabishekam and to have a good dharsan of the deities.

I pray for peace and happiness for the people.

(Sd.) S. Sellapandian,

4—11—63.

Speaker, Madras Legislative Assembly, Madras.

# செய்திகள்

## தருமையாதீனத்தில் நவராத்திரி விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி அருள்வழங்கும் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகா லக்ஷ்மி துர்க்காதேவிக்கு 18—10—63 வெள்ளிக்கிழமை முதல் 27—10—63 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள நாட்களில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தன. காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீ துர்க்காதேவி சந்நிதியில் 13-ஆவது சதசண்டி யக்ஞம் மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. சதசண்டி யாகத்திற்காகச் சிறந்த முறையில் யாகசாலை அமைக்கப்பட்டது. மேலும் ஸ்ரீ துர்க்காம்பிகை சந்நிதியில் ஆயிரக்கணக்கான மக்கள் ஒருசேர நின்று தரிசிக்க வாய்ப்பாகக் கொட்டகை அமைக்கப்பட்டிருந்தது.

18—10—63 வெள்ளிக்கிழமை முதல் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்கா தேவி சந்நிதியில் சுவாசிநீகுமாரி வடுபூஜை, லக்ஷார்ச்சனை, ஸ்ரீ வித்யாசக்ரமாகிய மேருவிற்கு ஸகஸ்ரநாமார்ச்சனை முதலியனவும், வேதபாராயணம், தேவீமாகாத்மிய பாராயணம், துர்க்கா சூக்த பாராயணம், திருமுறைப் பாராயணம், அபிராமிஅந்தாதி பாராயணம் முதலியனவும் நடைபெற்றன. 26—10—63 சனிக்கிழமை நண்பகல் மகாபூர்ணாகுதி சதசண்டிஹவனபூர்த்தி நிகழ்ந்தது. 27—10—63 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கு யாகக்கலசாபிஷேகம் நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் பூர்ணாகுதி தரிசனத்திற்கு நாள்தோறும் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். 27—10—63 அன்று யாகக் கலசாபிஷேகத்திற்குப் பின்னர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் பிரசாதங்கள் போடப்பட்ட பைகளை அன்பர்களுக்கு வழங்கியருளினார்கள். நாள்தோறும் அன்பர்கள் பலர் வந்து தரிசித்து உய்ந்தனர்.

## ஆதீனக் கல்விநிலையங்களின் கலைமகள் விழா.

நவராத்திரிவிழா நாட்களில் ஆதீன மடாலய முகப்பிலுள்ள திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தில் தருமையாதீனக் கல்வி

நிலையங்களின் கலைமகள்விழா நிகழ்ந்தது. விழா நாள்தோறும் மாலை 6-மணிக்குத் தொடங்கி நடைபெற்றது. நிகழ்ச்சி தொடங்கும் முன்னர் ஆதீனத் தேவார பாடசாலை மாணவர்கள் திருமுறைப் பாராயணம் செய்தனர். நவராத்திரிவிழா சிற்றிலக்கியத் திருநாளாக, உலா, பிள்ளைத்தமிழ், கலம்பகம், குறம், பரணி, கோவை, தூது, நான்மணிமாலை, மும்மணிக்கோவை, அந்தாதி என்ற முறையில் பத்து நாட்களிலும் ஒவ்வொரு பிரபந்தம் பற்றிய சொற்பொழிவுகள் நடைபெற்றன. 18—10—63 அன்று மாயூரம் திரு. B. திருஞானம்பிள்ளை, B. A , B. L., அவர்களும், 19-10-63 அன்று மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் திரு. அ. காந்திமதிநாதன், M. A., அவர்களும், 20—10—63 அன்று மாயூரம், சிவநேசச்செல்வர், திரு. V. இராமநாத அய்யர், B. A., அவர்களும், 22—10—63 அன்று மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ்விரிவுரையாளர் திரு, ந. தேவ ராஜன் M. A., அவர்களும், 23—10—63 அன்று மாயூரம் அ, வ அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. அ. கலிய பெருமாள், M. A., அவர்களும், 24—10—63 அன்று மாயூரம் அன்பநாதபுரம் வகையார் அறத்துறை உயர் அலுவலர் திரு. K. கிருஷ்ணமூர்த்திப் பிள்ளை அவர்களும், 25—10—63 அன்று தருமை ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளித் தலைமையாசிரியர் திரு. R. V. கணேசன், B. A., L. T., அவர்களும், 26—10—63 அன்று மாயூரம் நகராட்சி உயர்பள்ளித் தலைமையாசிரியர் திரு. K. கணபதிச் செட்டியார், B. A., L. T., அவர்களும், 27—10—63 அன்று மாயூரம் தாசில்தார், திரு. ஸ்ரீ. ராஜகோபாலன், B. A. அவர்களும் சிறப்புரையாற்றினர். தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளித் தமிழாசிரியர்கள், மாயூரம் தேசிய உயர்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான், திரு. அ. இராமபத்ரன், தருமை ஆதீனம் குமரக்கட்டளை கட்டளைவிசாரணை, ஸ்ரீமத். சட்டைநாதத் தம்பிரான் சுவாமிகள் முதலியவர்களும் ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர்களும் சிற்றிலக்கியச் சொற்பொழிவாற்றினர்.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி மாணவ மாணவிகள் 18—10—63 முதல் 22—10—63 முடிய உள்ள நாட்களிலும், 23, 24, 25—10—63 ஆகிய நாட்களில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளி மாணவிகளும் கலைநிகழ்ச்சிகள் நிகழ்த்தினர். 26, 27—10—63 ஆகிய நாட்களில் ஷை பள்ளி மாணவர்கள் ஓரங்கநாடகம் நடித்தனர். அன்பர்கள் பலர் வந்து கண்டும், கேட்டும் மகிழ்ந்தனர்.

# தருமையாதீன தேவஸ்தானங்களில் நவராத்திரிவிழா

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனத்திற்குச் சொந்தமான 27 தேவஸ்தானங்களிலும், நவராத்திரிவிழா மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. ஒவ்வொரு தேவஸ்தானத்திலும் 18—10—63 வெள்ளிக்கிழமை முதல் 22—10—63 ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள நாட்களில் அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் சிறப்புற நிகழ்ந்தன. நவராத்திரி நாட்களில் வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 19-10-63 சனிக்கிழமைமுதல் 27—10—63 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள நாட்களில் சமயச் சொற்பொழிவுகள், வீணை இன்னிசை, இன்னிசைச் சொற்பொழிவு முதலியனவும், சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில் 19—10—63 சனிக்கிழமைமுதல் 26—10—63 சனிக்கிழமை முடிய உள்ள நாட்களில் சமயச் சொற்பொழிவுகளும், வீணை இன்னிசையும், திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 20—10—63 ஞாயிற்றுக் கிழமை முதல் 23—10—63 புதன்கிழமை முடிய உள்ள நாட்களில் சமயச்சொற்பொழிவுகளும், இன்னிசைச் சொற்பொழிவும், திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 20, 21, 22, 25—10—63 ஆகிய நாட்களில் சொற்பொழிவுகளும், திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 19, 20, 22, 24—10—63 ஆகிய நாட்களில் சொற்பொழிவுகளும், இன்னிசைச் சொற்பொழிவும், திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் 20—10—63 ஞாயிற்றுக்கிழமைமுதல் 25—10—63 வெள்ளிக்கிழமை முடிய உள்ள நாட்களில் சொற்பொழிவும், இன்னிசைச் சொற்பொழிவுகளும், திருக்குவளை, ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் 21—10—63 திங்கட்கிழமை முதல் 25—10—63 வெள்ளிக்கிழமை முடிய உள்ள நாட்களில் சொற்பொழிவுகளும், பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ்தானத்தில் 25—10—63 வெள்ளிக்கிழமையன்று சொற்பொழிவும் நடைபெற்றன. அங்கங்கும் அன்பர்கள் பலர் வந்து கண்டும் கேட்டும் உய்ந்தனர்.

## சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தில்

# மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு

சென்னை சமயப் பிரசார நிலையத்தின் மாதாந்தர சமயப் பிரசாரமும், வழிபாடும் சென்னை அமைந்தகரைக்கு அருகில் உள்ள கோயம்பேடு ஸ்ரீ குசலவபுரீசுவரர் ஆலயத்திலும், ஸ்ரீ வைகுண்டவாசப்பெருமாள் ஆலயத்திலும் 13—10—63 ஞாயிறன்று மிகச் சிறப்பாக நடைபெற்றன. வழிபாட்டுக் குழுவினரை தேவஸ்தானங்களின் நிர்வாக அறங்காவலர் திரு. நந்தகோபால் அவர்களும், மற்ற அறங்காவலர்களும் ஊர்ப்பொதுமக்களும் வரவேற்று வழிபாட்டையும், பிரசாரத்தையும் நன்கு நடத்தி வைத்தனர். குழுவினர் அன்று காலையில் கோயிலில் உள்ள புல் பூண்டுகளை உழவாரப்பணி செய்து அகற்றினர், குழுவிலுள்ள பெண்மணிகள் கூட்டி தண்ணீர் தெளித்துக் கோலமிட்டுக் கோயிலை அணி செய்தனர். அன்று மாலை குழுவினர் சார்பில் விசேஷ அபிஷேக ஆராதனை நடைபெற்றன. குழுவினர் சிவபுராணம் ஓதிக்கொண்டு மாடவீதிகளை வலம்வந்து திருக்கோயிலில் முறையாக வழிபாடு நிகழ்த்தினர்.

பிறகு ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் சமயப் பிரசாரம் நடைபெற்றது. சுவாமிகள் பேசும்போது இராமபிரானின் குமாரர்களான குசனும், லவனும் பூசித்துப் பேறுபெற்றதால் இறைவன் குசலவபுரீஸ்வரர் என வழங்கப் பெறுகிறார் என்றும், சுவாமி அம்பாள் இரண்டு சந்நிதிகளும் வடக்கு நோக்கி இருப்பது சிறப்புடையது என்றும், பல்லவர், சோழர், விஜயநகர மன்னர்கள் ஆகிய மூவரால் திருப்பணி செய்யப்பட்ட சிறப்புடையது என்றும், ஸ்ரீ வைகுண்டவாசப் பெருமாள் கோயிலில் வால்மீகியும், குசலவர்களும் உள்ள சிலா விக்கிரகம் இருப்பது இத்தல வரலாற்றை விளக்குகிறது என்றும். இப்பழமையான கோயில்கட்கு உரிய சொத்துக்கள் இக்கோயில் கட்குப் பயன்படாமல் இருப்பது வருந்தத்தக்கதென்றும், ஊரும், நாடும் சுபிட்சமாக இருக்கவேண்டுமானல் கோயில்களில் வழிபாடும், விழாக்களும் சிறப்பாக நடைபெற வேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள். திரு. P. சுவாமிநாதன் தேவாரத் திருமுறைகளை ஓதிச் சிறப்பித்தார்.

# எதிர்காலம்

திரு. கே. முத்துஜோதிடர்

(சோபகிருதுஹு கார்த்திகைமீ 1உ முதல் 29உ முடிய)

(17—11—63 முதல் 15—12—63)

**1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼**

மேஷராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். சகல காரியங்களும் சாதகமாகும். வம்ச விருத்தியாகும். நஷ்டதனம் தானுக வந்து சேரும். குடும்பம் ஓங்கும். சனி, செவ்வாய் சுபமாகும்.

**2. ரிஷபம். கார்த்திகை ¾ - ரோஹிணி - மிருகசீரிஷம் ½.**

விருஷப ராசி 9 பாதங்களும் லாபத்தைத்தரும். உயர்பதவிகள் உத்தியோகத்தில் ஏற்படச் செய்யும். களத்திரபுத்திராதிகளால் சுகம் உண்டுபண்ணும், சபையில் பூஜிக்கும் தன்மை ஏற்படும். புதன், வியாழன் சுபமாகும்.

**3. மிதுனம். மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾.**

மிருகசீர்ஷம் 3, 4 பாதங்கள் சுபமாகும். வித்யா விருத்தியாகும். தொழில் ஓங்கும்: திருவாதிரை நான்கு பாதங்களும் புனர்பூசம் 1, 2, 3 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும்: சொல்ப நஷ்டங்கள் கூடுதலாகக் காட்டும். சஸ்ய தான்ய விருத்திகளில் இடைஞ்சல் ஏற்படச்செய்யும். அனுவசியமான தொல்லைகள் உண்டுபண்ணும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

**4. கடகம். புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.**

கடகராசி 9 பாதங்களும் ஜயத்தைத்தரும். சஸ்ய விருத்தியையும் தான்ய விருத்தியையும் கொடுக்கும். வித்யா விருத்தியும் உத்தியோக உயர்வும் ஏற்படச்செய்யும்: மேலோர் பெரியோர் அன்பு கிட்டும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

## 5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி 9 பாதங்களும் மிச்ரபலனைத்தரும்; தொழில் ஓங்கும்; குடும்பம் தழைக்கும்; வரவு செலவு சமமாகும்; தெய்வ பலம் காக்கும்; ஞாயிறு திங்கள் சுபமாகும்.

## 6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

உத்திரம் 2, 3, 4 பாதங்களும் மிச்ரபலனைத்தரும். வரவு செலவு சமமாகும்: ஆனாலும் தொழில் ஓங்கும், துன்பம் விலகும். ஹஸ்தம் 1, 2 பாதங்கள் சரீர பீடையைக் கொடுக்கும், அதிக அலைச்சல்கள் உண்டுபண்ணும்; மனம் நிம்மதி இல்லாமல் இருக்கும், ஹஸ்தம் 3, 4 பாதங்களும் சித்திரை 1, 2 பாதங்களும் தெய்வீக பலத்தால் உலக பிரசித்தியையும், ஸஸ்ய தான்ய விருத்திகளையும் தரும். சகலகாரியங்களும் வெற்றி அடையும். ஆரோக்யம் உண்டுபண்ணும். மனம் சாந்தமாகும். புதன் வெள்ளி சுபமாகும்.

## 7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, - சுவாதி - விசாகம் $\frac{3}{4}$.

சித்திரை 3, 4 பாதங்கள் சுபமிராது. செலவினங்கள் அதிகமாகும். ஆரோக்யக்குறைவு காட்டும். சுவாதி நான்கு பாதங்களும், விசாகம் 1,2,3 பாதங்களும் சுபத்தைத் தரும், தனதான்யம் விருத்தியாகும், தெய்வபலம் முன்னின்று காக்கும், சத்ருக்கள் சரண் அடைவார்கள். வியாழன், வெள்ளி சுபமாகும்.

## 8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் - கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் தனதான்ய பெருக்கத்தைத் தரும், வெகுதூரத்திலிருந்து அழைப்புப் பத்திரம் வரும். அடிக்கடி ஸஞ்சாரபலன் ஏற்படச்செய்யும், குடும்பம் ஓங்கும். மனம் சாந்தி அடையும். சனி, ஞாயிறு சுபமாகும்.

## 9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9 பாதங்களும் சுபமேயாகும். சகல துன்பங்களும் விலகும். வெகுகாலமாய் எதிர்பார்த்து நடைபெறாத காரியங்கள் எல்லாம் சாதகமாகும். அடிக்கடி சஞ்சார பலன் ஏற்படும். புத்திராதிகளால் சுகம் உண்டாகும்.

## 10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் ஆரோக்யத்தைத் தரும். உத்தி யோகத்தில் உயர்பதவிகள் ஏற்படச்செய்யும். மெடல்கள் கிடைக் கும். சஞ்சார பலன் ஏற்படும். அந்நிய தேசத்திலிருக்கும் அபூர்வமான வஸ்துக்கள் கிடைக்கச்செய்யும். சனி, ஞாயிறு சுபமாகும்.

## 11. கும்பம். அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾.

கும்பராசி 9 பாதங்களும் நலனைத்தரும். வெகுதூரத்தி லிருந்து அழைப்புப்பத்திரம் வரும். நூதன வஸ்திராபரணச் சேர்க்கைகளும் ஆரோக்யமும் உண்டாகும். தெய்வபலம் காக்கும்.

## 12. மீனம். பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் தனலாபத்தைத்தரும். தொழில் ஓங்கும். அடிக்கடி சஞ்சார பலன்களை உண்டுபண்ணும்; சத் ருக்கள் ஓடி விடுவார்கள். உயர்பதவிகளும் உலக பூஜிதையும் ஏற்படச்செய்யும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு :—மேற்படி கார்த்திகை மாதத்தில் அடிக்கடி மழை கள் ஏற்படும். அநேக இடங்களில் பயிர்களுக்கும் தான்யங் களுக்கும் ஈதிபாதைகளால் சேதம் உண்டுபண்ணும். இயற்கை கள் ஒரு நிலையாய் நடக்காது, ஹிமாலயத்திலும் வடகிழக்கு வடமேற்கு த்வீபங்களிலும் அமைதிக் குறைவும் உள்நாட்டுக் கலகங்களும் உத்பாதங்களும் உண்டுபண்ணும். தக்ஷிணமத சத்திலும் தொத்து வியாதிகளாலும், இயற்கைக் கோளாறு களாலும் மகாஜனங்களுக்குப் பூர்ண சந்தோஷம் அளிக்காது ஸ்ஜ்ஜனங்கள் மஹாஜனங்கள் தெய்வபலத்தையே நாடி உலக க்ஷேமத்தின் பொருட்டு ஆங்காங்கு கோயில்கொண்டு எழுந் தருளி இருக்கும் சிவவிஷ்ணு ஆலயங்களில் மஹாநதிதீரங் களிலும் லக்ஷம்கோடி அர்ச்சனைகளும் மகாயக்ஞங்களும் செய்து கொண்டு மதமாத்ஸர்யம் இல்லாமல் ஒத்துழைப்புடன் நமது காருண்ய காங்கிரஸ் சர்க்காருடன் ஒத்துழைத்துக்கொண்டு தர்ம புத்தியோடும் பரோபகார சிந்தனையோடும் உலகமக்கள் எல்லோரும் சுகம் அடைய வேண்டுமென்று கடவுளைப் பிரார்த் தனை செய்துகொண்டு வர சகல பயமும் நீங்கி சுபத்தை உண்டு பண்ணும்.

சுபம்.

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய
சமயப்பிரசார நிலையத்தில்

## நவராத்திரி விழா

சென்னை சமயப் பிரசார நிலையத்தில் 18—10—63 முதல் 26—10—63 முடிய நவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்றது. ஒவ்வொரு நாளும், சாகித்திய சிரோமணி, திரு. T. N. கோபால சர்மா அவர்கள் தேவிபாகவதம் பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். திருமதிகளான, S. அலமேலு அம்மாள், பிருந்தா வரதராஜன், M. E. சரசுவதியம்மாள், K. சுசீலா, கே. சகுந்தலா, ஜெயகுமாரி பாஸ்கரன், இலட்சுமி ஆகியோர் கலைமகள் வழிபாடு . தேவி கீதையும் விசுவரூப தரிசனமும். சத்தி வழிபாட்டின் தொன்மை, கொற்றவை வழிபாடு, திருமகள் வழிபாடு, கலைமகளும் கம்பரும், மீனாட்சி அம்மை வழிபாடு, என்பனபற்றி விரிவுரை யாற்றினார்கள். திரு. T. C. நீலகண்ட ஐயர் விகடம், திரு R. R. கோபால் & முருகானந்தம் விகடம், திரு. S. A. நடேசய்யர், திரு. N. நாகராஜ ஐயர் விகடம், திரு. கொத்தமங்கலம், சுப்பு அவர்களால் "பார்வதி திருமணம்" செல்வி, கௌரி குழுவினரால் "மீனாட்சியம்மை திருமணம்" கதாகாலட்சேபம் முதலிய கலை நிகழ்ச்சிகளும் விழாவைச் சிறப்பித்தன இராவ்சாகிப் திரு. நல். முருகேச முதலியார், பைந்தமிழ்ச்செல்வர், திரு ச. சிவகுமாரன், திரு. K. கமலக்கண்ணன், திரு. T. K. சுப்பிரமணிய பிள்ளை, கனம். S. செல்லபாண்டியன், கனம். P கக்கன், திரு M.S. சாரங்கபாணிமுதலியார், செந்தமிழ்ச் செல்வர். திரு. கி. வா. ஜகந்நாதன் ஆகியோர் ஒவ்வொருநாள் தலைமை வகித்து அறவுரை கூறிச் சிறப்பித்தார்கள். நாள்தோறும் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் நவின்றார்கள். நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர், திரு. P. சுவாமிநாதன் கடவுள் வணக்கமும், வாழ்த்தும் பாடினார்.

## திருமுறை வகுப்பு சம்ஸ்கிருதவகுப்பு
## ஆண்டுவிழா

சென்னை சமயப்பிரசார நிலையத்தில் நடைபெற்று வரும் தேவாரத் திருமுறை வகுப்பின் பத்தாவதாண்டு நிறைவு விழாவும், சம்ஸ்கிருத வகுப்பின் ஐந்தாவதாண்டு நிறைவு விழாவும் 27—10—63 விஜயதசமியன்று மாலை 7 மணிக்கு நிலையமன்றத்தில் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் தலைமையில் கொண்டாடப்பெற்றது. தேவாரச் சிறப்புப்பற்றி திரு. பி. சுவாமிநாதன் அவர்களும், வடமொழி வளம்பற்றி திரு. டி. என். கோபால சர்மா அவர்களும் விரிவுரையாற்றினார்கள். திருமுறை வகுப்பு சம்ஸ்கிருத வகுப்பு மாணவ மாணவியர்கட்குத் தலைவரவர்கள் பரிசுகளை வழங்கி இளமையிலேயே தேவாரத் திருமுறைகளை ஓதக் கற்றுக்கொள்வதன் அவசியம் பற்றியும், வடமொழிபயில்வதால் உண்டாகும் நன்மைபற்றியும் விளக்கிப்பேசினார்கள். திரு. பி. சுவாமிநாதன் நன்றி கூறி கடவுள் வாழ்த்துப் பாடினார்.

உ

திருக்கயிலாய பரம்பரைத்
தருமபுர ஆதீனத்திற்குச்சொந்தமான
வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்

# ஸ்கந்தஷஷ்டி விழா

ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு 17-11-63முதல் தொடங்கி கந்தஷஷ்டி விழா நடைபெறுகிறது. சமயச் சொற்பொழிவுகளும்விசேஷ நாதஸ்வரத்துடன் திருவீதி யுலாவும் நடைபெறும். விழா நாட்களில் ஸ்ரீ முருகப் பெருமானுக்கும், ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கும் ஷண்முகார்ச்சனை ரூபமாக லட்க்ஷார்ச்சனை நடைபெறும். இரண்டு ஷண்முகார்ச்சனைகளுக்கும் ரூ 47 - 00 தேவஸ்தானத்தில் செலுத்தி பல பக்தர்கள் பங்கு கொண்டு செய்துவருகிறார்கள். 24 - 11 - 63 அன்று தெய்வயானை திருமணமும், 25 - 11 - 63 அன்று வள்ளித்திருமணமும், மறுதினம் வெள்ளிரதத்தில் திருவீதியுலாவும் நிகழும்.

---

## மாதாந்தர சமயப்பிரசார வழிபாடு

சென்னை தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தின் மாதாந்தர சமயப்பிரசார வழிபாடு 24—11—63 ஞாயிறு காலை 9 மணிக்குத் திருவதிகையிலும், 11-மணிக்குத் திருவாமூரிலும், மாலை 4-மணிக்குத் திருநாவலூரிலும் நடைபெறும். வழிபாட்டு அன்பர்கட்குப் பஸ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam press, Dharmapuram (Mayuram) 10-11-63.